விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 16 வெள்ளிக்கிழமை (30.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 193

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## திருகோணமலை ஹர்த்தாலின்போது

# பணிக்கு சமுகமளிக்காத அரச ஊழியர்கள் தாமாகவே பதவி விலகியவர்களாவர்!

## வடக்குக் கிழக்கு மாகாணசபை அறிவிப்பு

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்ட ஹர்த்தாலின் காரண மாக பணிகளுக்கு சமுகமளிக்காத வடக்குக் கிழக்கு மாகாண சபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் தாமாக வே பதவியிலிருந்து நீங்கியுள்ளதாக கருதப் படுவர் என வடக்குக் கிழக்கு மாகாண சபை யின் செயலாளர் எஸ்.ரங்கராஜ் திணைக் களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல மாகாண சபை மற் றும் திணைக்களங்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அவர் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் பரிந்துரையின் கீழ் உள் ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட் டதாக எஸ்.ரங்கராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊழியர்கள் கடமைக்குச் சென்ற போது அவர்களின் பதவி விலகல் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிப்பின் மூலம் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் கல்முனையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த தயாநிதி கேதீஸ்வரன் (வயது-29) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கல்முனை பாண்டிருப்பு அரசுனர் வீதி யிலுள்ள தனது வீட்டிலிருந்த போது நேற்று முன்தினம்இரவு 8 மணியளவில் அடையா ளம் தெரியாத நபர்களினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட தயாநிதி கேதீஸ் வரன் ஒரு குழந்தையின் தந்தையாவார். வாகனத்தில் அவரது வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் 9 எம்.எம். பிஸ்டலால் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ச-5)

# புலிகள் தமது கோரிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## நோர்வே வேண்டுகோள்

(ஒஸ்லோ)

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்துள்ள நோர்டிக் நாடுகளைச் சேர்ந்தவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறக் கூடாது என்ற கோரிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஒஸ்லோவில் நடைபெற்ற நோர்டிக் நாடுகளின் பிர திநிதிகள் கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக நோர் வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெரிவித்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகங்களை எப்போதும் பலவீனப்படுத்திவிட முடியாது

## தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

ஊடகங்கள் உண்மையான செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.ஈழநாதம் நாளேட்டின் முன்னாள் பொறுப்பாளர் மாவீரர் மேஜர் அழகனின் 14 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

ஊடகங்கள் உண்மையான செய்திகளை மக்களிடம் எடுத்துச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை

## அமெரிக்க நாளேடு சுட்டிக்காட்டு

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகள் பயன்படுத் துகின்ற வழிமுறைகளை அமெ ரிக்கா நிராகரித்த போதிலும் தமி ழின மக்களால் எழுப்பப்படு கின்ற கோரிக்கைகள் நியாயபூர்வமான வை என அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'போஸ்டன் குளோப்' ஏடு தெரிவித்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா வது,

இலங்கை இனப்பிரச்சினை யானது இங்கே சிறிது கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால் 1983 ஆம் ஆண்டு முதல் அரசாங் கத்திற்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் இடையேயான வன்முறைகளால் மொத்தம் 70 ஆயிரம் பேர் உயிரி ழந்துள்ளனர்.

தற்போது இலங்கை இராணு வத்தின் துணைத்தளபதி கடந்த திங்கட்கிழமை தற்கொலைக் குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டுள் ளார்.

இச் சம்பவம் ஆனது அரசாங் கத்திற்கும் போராளிகளான தமிழ்ப் புலிகளுக்கும் இடையே கடந்த 2002 ஆம் ஆண்டு கைச்சாத் திடப்பட்டு ஏற்கனவே முறிவடையும் நிலைமை (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான திட்டங்கள் தயாராகவே உள்ளன!

## பாலித கோகன்ன தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுட னான பேச்சுவார்த்தைக்கான திட் டங்களை முன்வைத்துள்ளதாக அரசசமாதான செயலகப் பணிப்பா ளர் பாலித கோகன்ன தெரிவித்துள் ளார்.

வன்முறைகள் அதிகரித்து மீண் டும்பேச் சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் பேச்சுக்கான திட்டங்களை பேச்சு மேசையில் முன்வைத்துள்ளோம்.

இருப்பினும் அவை முன்னைய திட்டங்களா அல்லது நோர்வே அனுசரணையை வெளியேற்றி விட்டு பேச்சுநடத்த முடிபு செய் துள்ள திட்டங்களா என்பது குறித்து பாலித கோகன்ன விளக்க வில்லை.

கண்காணிப்புக்குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் கள் வெளியேற வேண் டும் என்ற விடுதலைப்புலிகளின் ஒருதலைப் பட்சமான முடிபை அரசாங்கம் நிராகரிப்ப (10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

நவாலியில் நேற்றிரவு 7.30 மணியள வில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ த்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள் ளார். காயமடைந்தவர் யாழ்.போதனா வைத் தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனு மதிக் கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் இளையதம்பி வன்னிய சிங் கம் (வயது-43) எனத் தெரிவிக்கப்பட்டது.(ச-5)

## மக்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு

## சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

'பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்க ளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க அரசாங் கம் பாதுகாப்பளிக்கத் தவறிவிட்டதால் அந்த மக்கள் அச்சமடைந்துள்ளனர்' என்று சர்வ தேச மன்னிப்புச் சபையின் ஆசிய இயக் குநர் பூர்ணா சென் தெரிவித்துள்ளார்.

'அண்மைக்காலமாக நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு பாரிய தாக்குதல்களின்போதும் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி செல்கின்றனர்' என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் மொத்தம் 6லட்சத்து 39 ஆயிரத்து 400 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒழுங்கமைக்கப்பட்ட முகாம்களிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துவருகின்றனர்.

விடுதலைப்புலிகளாலும் இதர ஆயுதக் குழுக்களாலும் அரசாங்கப் படைகளாலும் கூட வன்முறை (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுமொத்த தமிழர்களும் போராட தயாராகி விட்டார்கள் - கேணல் பானு!

(கிளிநொச்சி)

ஒட்டுமொத்த தமிழினமும் போராடினால்தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற எண்ணம் தற்போது தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

லெப். கேணல்றீகன்படையணி தொடக்க பயிற்சிக்கல்லூரியில் பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட அணியினருக்கான இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கட்டளைத் தளபதி கேணல் பானு இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் ஒட்டுமொத்ததமிழினமும் போராட வேண்டும். அதன் மூலம் தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் மக்கள் போராடுவதற்கு தயாராகிவிட்டனர். அவர்களது எண்ணங்களைநிறைவேற்றி வைக்க வேணடியவர்களாக நாங்கம் உள் ளோம் என்றார்.

கடந்த 25ஆம் திகதி இரவு லெப்.கேணல் றீகன் படையணி தொடக்கப் பயிற்சிக்கல்லூரியில் மேற்படி கல்லூரிப் பொறுப்பாளர் சிவராம் தலைமையில் நிகழ்வு கள் நடைபெற்றன. பொதுச்சுடரினை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.தயாமோகன் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஏற்றி வைத்தார்.

பயிற்சியினை நிறைவு செய்த போராளிகளின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. இறுதியாக பயிற்சியினை நிறைவு செய்த போராளிகளிடையே பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது. திறமையீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (க)

## மாணிக்க வாசகர் குருபூசை விழா

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வழமைபோல் நடாத்தி வரும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை விழா இன்று காலை 9.00 மணியளவில்'நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் ஆலயப்பூசையைத்தொடர்ந்து நடைபெறும்.

மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேடப்பூசைவழிபாடு, திருவாசகப் பாடல்கள், பாராயணம் ஆகியன இடம்பெறும்.மாலை4.30மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீலாலாம்பிகை சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் கடையிற்சுவாமிஆலயத்திலும்மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வைபவம் இடம்பெறும். (க)

## விவசாய போதனாசிரியர்கள் 128 பேருக்கு நியமனக் கடிதங்கள்

(கொழும்பு

வடக்கு-கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்பாசன, காணி, மீன் பிடித் துறை அமைச்சு கடந்த வாரம் 128 விவசாய போதனாசிரியர்களுக்கு நியமனக்கடிதங்களை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா அதிதியாகக் கலந்து கொண்டு 128 புதிய விவசாயப் போதனாசிரியர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இதுவரை 828 வெளிக்கள உத்தியோகத்தர்கள் வட-கிழக்கில் இவ்வாண்டு நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய விவசாய போதனாசிரியர்கள் வட-கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் பின்தங்கிய பகுதிகளில்நியமிக்கப்பட்டுள்ளனா்.

விவசாய, கால்நடை, நீர்பாசன, காணி, மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் ஏ.ஆர். எம்.மறூப் மேலதிக செயலாளர், கே.பரமலிங்கம், மாகாண காணி ஆணையாளர் ஆர்.ரவீந்திரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம், விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் ஆகியோர் பிரதான அதிதிகளாக கலந்துகொண்டனர்.

கிராமிய பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இப்புதிய விவசாய போதனரசிரியர்கள் சேவையாற்றவேண்டும்என அங்கு கூறப்பட்டது. (க-7)

## இராசிபலன்

30.06.2006
(ஆனி 16, வெள்ளிக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 3.39 மணிவரை
மகம் பின்னிரவு 12.41 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56மணிவரை
சுபநேரம் 5.56-7.26 மணிவரை
மாணிக்கவாசகர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சகோதரர் உதவி, வியாபார நன்மை. |
| இடபம் | மனச்சோர்வு, ரோகநிலை, தனவிரயம், திடீர் நன்மை. |
| மிதுனம் | நற்கீர்த்தி, இஷ்டசித்தி, மனோதைரியம், தெய்வ தரிசனம். |
| கடகம் | பொருள்விரயம், போசனசுகக்குறைவு, காரிய இடையூறு, மனோசங்கடம். |
| சிங்கம் | வெகுமானம், மாதர் நட்பு, நல்ல முயற்சி, சயனசுகம். |
| கன்னி | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், எடுத்த காரியம் தாமதம், பணவிரயம். |
| துலாம் | தனதானிய சேர்க்கை, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை. |
| விருச்சிகம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், மனமகிழ்ச்சி, தெய்வதரிசனம். |
| தனுசு | எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், வீண்பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | பொருள் விரயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், அஜீரணக் கோளாறு. |
| கும்பம் | மனோதைரியம், தேகநலன், கீர்த்தி, தெய்வசிந்தை. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், தேகநலன், தெய்வசிந்தை. |

- வளவன்

## மத்தியஸ்தர்கள்குழு நியமனம்

கரவெட்டி பிரதேசத்தின் மக்களிடையே ஏற்படும் சிறு பிணக்குகளை சமரசம் செய்தவற்கும் தீர்த்து வைப்பதற்கும் 15பேர் அடங்கிய மத்தியஸ்தர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு நியமனக் கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கலந்துகொண்டு இவர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கினார்.

கே.நாகலிங்கம், ஏ.ஈஸ்வரதேவன், கே.மகாதேவன், எஸ்.நல்லதம்பி, எஸ்.செல்வராஜா, எஸ். செல்வரட்ணம், எஸ்.வீரசிங்கம், கே.சரவண பவானந்தன், எம்.தர்மலிங்கம், எஸ்.கோபால சாமி, எஸ்.சிவராஜா, வி.அருள்செல்வன், யோசப் பிரான்சிஸ், எஸ்.சதானந்தன், என்.பாலசுப்பிர மணியம் ஆகியோரே மத்தியஸ்தர்களாக நியமனம் பெற்றவர்களாவர். (க-101)

## ஐ.நா.குழு விரைவில் இலங்கை வரும்!

இலங்கையில் சிறார் படைசேர்ப்பு குறித்து விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் தொடர்பான பிரிவின் குழு விரைவில் இலங்கை வருகைதரவுள்ளது.

ஐ.நா.வின் இனப்பிரச்சினைகளில் சிறார் பாதிப்பு பிரிவின் சிறப்பு பிரதிநிதியென ராதிகா குமாரசுவாமி இதனைத் தெரிவித்தார். சிறார்படை சேர்ப்பு குறித்த உண்மை அறியும் குழுவுக்கு கனடாவின் ஆலன் ரோக் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவின் பயண நாட்கள் குறித்து இன்னும் உறுதி செய்யப்படவில்லை. (க)

## வாகரையில் மூவரைக் காணவில்லை

மட்டக்களப்பு வாகரையில் மூன்று வர்த்தகர்களை கடந்த மூன்று நாட்களாகக் காணவில்லை என தெரிய வந்துள்ளது. வாகரைக்கு குளிர்பானங்களை ஏற்றிக் கொண்டு லொறியில் சென்ற மூவரையே காணவில்லை என தெரிவிக்கப்பட்டது.

ஓட்டமாவடியைச் சேர்ந்த சேகு லெப்பை இப்ராகிம் (வயது 22), பொலநறுவ மின்னேரியாவைச் சேர்ந்த இந்திகா (வயது 24), பொலநறுவையைச் சேர்ந்த பிரசன்னா (வயது 27) ஆகியோர் காணாமல்போயுள்ளனர். (ச)


மணி பல்லவத்தில் மஹோற்சவம்







நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

இன்று ஐந்தாம் திருவிழா

உன்னையன்றி வேறு யாருளர்?

பூத்தவளே புவனம் பதி
நான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறை கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி
மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே!

அபிராமி அந்தாதி

வரலாற்று நாயகியே!

செந்தமிழ் சிவநெறி சேர்அருள் திகழ்நயினை
சூழ்கடல், நீள்புகழ், செறிவுயர் திருப்பதி
அந்தமில் ஆரணியே! ஆரமுதே! நாகபூஷணியே!
ஆராதித் தோமுன்றன் அருட்பதம் அனுதினமும்
வந்தோமெம் வளர் நயினை வரலாற்று நாயகியே!
வாழ்த்தி, வணங்கி, வரமருள், வேண்டுகின்றோம்
விந்தைபுரி வித்தகியே வேதவல்லி நாச்சியரே!
வேண்டும்சமாதானம் விரைந்தருள வேண்டும்தாயே!

தா.தேவமதுரம் (அரியாலை)

மானிலம் பயனுற வேண்டுமம்மா!

ஐந்து தலை நாகத்துள் அமர்ந்தவளே
ஆறுதலைத் தந்தெமைக் காப்பவளே
சொந்தமும் பந்தமும் ஆனவளே
சோதனை வேதனையை ஒழிப்பவளே
எந்த வினை சூழ்ந்தாலும் தீர்ப்பவளே
எழிலான வாழ்வுக்கு அருள்பவளே
இந்த மானிலம் பயனுற வேண்டுமம்மா
இன்னு மேன் எமக்கிங்கு சோதனைகள்!

மதுரகவி

வாழ்வு தா!

கடல் அலைபாயும் கரைத் தேரோடுவீதி
தடல் புடலெனவரும் தங்கரதக் - கடவுள்நீ
தங்கத் தமிழ்த்தாய்நீ தெய்வமே நாகேஸ்வரியே
எங்கள் தமிழே வாழ்வுதாநீ

நல்லூர் சிவமுருகன் என்.-தமிழ்மகன்

அரவணைப்பாள் அன்னை

எங்களுக்கு இரங்கிடுவாய் நாகபூஷணி
ஏற்றங்கள் தந்திடுவாய் நாகபூஷணி
பொங்குதுயர் தணித்திடுவாய் நாகபூஷணி
புவியனைத்தும் காத்திடுவாய் நாகபூஷணி
தங்குபுகழ் பரப்பிடுவாய் நாகபூஷணி
தமிழருக்கு தீர்வருள்வாய் நாகபூஷணி
பங்கமதை போக்கிடுவாய் நாகபூஷணி
பார்வாழ அருள் செய்வாய் நாகபூஷணி

தன - துஷ்யந்தி

சிவனருள் பெறுவது திடனே

நாகபூ சணிநறுந் தொடைமுடி நாற
பாகமாம் பரமனைச் சேர்வீரே
பாகமாம் பரமனை சேருவிர் உயிரெல்லாம்
போகம் நுகருதல் பொருளே
நலம் தரும் பதியென நயினையை நயந்து
பலபட அரவுடை யீரே
பலபட அரவுடை யீருமைப் பரவுவார்
சிவனருள் பெறுவது திடனே

சிவ சண்முகவடிவேல்

# திருவாசகத் தேனை நமக்கு அருளிய திருவாதவூரடிகள் குருபூசை இன்று

## தித்திக்கும் திருவாசகப் பாடல்களை முத்திக்கு வித்தாக அருளிய வள்ளல் - மாணிக்கவாசகர் -

**சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**

தித்திக்கும் தேன் போன்ற திருவாசகத்தை நமக்கு அருளிச்செய்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். நமது உடலில் சிரசு மேலானது. அதற்கு மேல் இருப்பது சிகை. சிகைக்கு மேல் ஒன்றும் இல்லை. ஆகவே சிகாமந்திரமாக விளங்கும் திருவாசகத்துக்கு மேல் சிறந்தது ஒன்றும் இல்லை.

'திருவாசகம் எட்டாந் திருமுறையாகும். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது முதுமொழி. கல்லையுங் கரைக்கும் கனிவுடையது திருவாசகம்.

இப்பரந்த நிலவுலகத்தின் கண்ணே வாழ்கின்ற முறைமையை வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள். அவர்களுள் மாணிக்கவாசகர் தனிமதிப்புக்குரியவர். அவரது குருபூசையை நாம் இன்று கொண்டாடுகிறோம். பரங்கருணைத் தடங் கடலாகிய பரமேஸ்வரனே இவருக்காக பரமாசார்ய வேடந்தாங்கி வந்து குருந்தமர நிழலிலே ஆட்கொண்டார் என்றால் இவர் பெருமை சொல்லவும் அரிதே.

மதுரை மாநகரிலே செம்மனச்செல்விக்கு அருளுமாப் போல மணிவாசகருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படியும் பட்டார். அது மாத்திரமல்ல குதிரைச் சேவகனாக வந்து நரியைப் பரியாக்கிப் பல திருவிளையாடல்களும் புரிந்துள்ளார். அத்துணை சிறப்பு வாய்ந்தவர் மாணிக்கவாசகர்.

திருவாதவூரிலே அவதரித்தபடியால் திருவாதவூரடிகள் என அழைக்கப்பட்ட இவரைப் பெற்றவர்கள் சம்புபாதாசிரியரும் சிவஞானவதி எனும் புண்ணியவதியுமாவர்.

சைவத்தின் மேன்மையை உலகுக்கு எடுத்துரைத்து புத்தரை வாதில் வென்று ஊமைப்பிள்ளையைப் பேச வைத்துப் பல அற்புதங்கள் செய்தார் மணிவாசகப் பெருமான்.

நெற்றியில் கல் வைத்துப் பாண்டிய மன்னனால் தண்டிக்கப்பட்ட இவர், சிவபிரானால் ஆட்கொள்ளப்படுவதற்காக வைகை நதி பெருக்கெடுத்ததும் பின்னர் நடந்தவையும் புராண வாயிலாக அறியக் கிடக்கிறது.

வான்கலந்த மாணிக்கவாசக நின்வாச
கத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்
சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்
தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாம
லினிப்பதுவே

என்ற இராமலிங்க அடிகளாரின் பாடல் திருவாசகப் பெருமையை எடுத்தியம்புகின்றது.

உடம்புக்குப் பல பிணிகள் உண்டு. அப்பிணிகளை எளிதில் போக்கவல்ல மருந்து தேன். உயிருக்கு எப்போதும் தொடர்ந்து வரும் நோய் பிறவி. இந்தப் பிறவிப் பிணி தீர திருவாதவூரடிகள் தந்துதவிய தேன் துளிகள்தான் 656 பாடல்களான திருவாசகம்.

வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேன் சேகரிப்பது போல வேதாகம உபநிடதங்களிலிருந்து மணிவாசகராகிய வண்டு திருவாசகமாகிய தேனை நமக்கீந்தருளினார்.

தேன் தானும் கெடாது. தன்னைச்சேர்ந்தவையையும் கெடவிடாது. அதேபோல் திருவாசகமாகிய தேனும் தானும் அழியாது தன்னை விரும்பி ஓதுபவர்களையும் அழியாமல் காக்குந்திறனுடையது.

மார்கழி மாதம் முழுவதும் தேவாரத்தைத் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு மணிவாசகரது திருவாசகத்தை மட்டும் ஓதும் முறைமை இப்பொழுதும் வழக்கிலிருக்கிறது.

திருவாசக முற்றோதல் நிகழ்வும் நடைபெறுகிறது. இது திருவாசகத்தின் அருமையையும் பெருமையையும் எடுத்துக்காட்டுகிறது அல்லவா!

ஆகவே மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தைக் கொண்டாடுவதோடு மட்டும் நின்றுவிடாமல் திருவாசகப் பாடல்களை மனமுருகப் பாடி உய்த்துணர்ந்து முத்தி அடைவதற்கு வழியைத் தேடிக்கொள்ள வேண்டியது சைவமக்களின் தலையாய கடமையாகும்.

சிவபெருமானின் திருவருட் பிரசாதத்தைப் பெற்றுய்தவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் செய்தவர் சிவன் என்று மணிவாசகரே கூறுகின்றார். இறைவன் தனது நிலையினின்றும் பெரிதும் இறங்கி வந்து இவருக்கு அருள்புரிந்தார்.

தந்ததுன்றன்னைக் கொண்ட தென்
றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்

என்ற பாடல் மூலம் அவர் விதந்துரைக்கின்றார். பெரிய கருணை நிறைந்த உன்னை எனக்குத் தந்து ஒன்றுமில்லாத என்னை ஆட்கொண்டீரே. இதில் யாருக்கு வெற்றி?

இவ்வாறு திருப்பெருந்துறையில் சிவன் திருவாதவூரடிகளுக்கு திருவருள் புரிந்த அருமை அளவிடற்கரியது. தம்மை வழிபடும் அடியார்களின் அகவிருளைப் போக்கி திருவருளைக் கொடுக்கின்ற பரமசிவன் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தைத் தானே நேரில் வந்து எழுத்தில் வடித்தார் என்றால் இந்தத் திருவாசகத்தின் பெருமையை என்னென்பது?

ஆகவே மணிவாசகர் அருளிய திருவாசகத்தை மனமுருக, உளமுருக, ஓதி பிறவிப் பிணி தீர்ந்து உய்தி பெறுவோமாக.

## வீதித்தடை மாற்றம்

சமீபத்தில் இராணுவத்தினரால் ஆரியகுளச் சந்தியிலும் வெலிங்டன் சந்தியிலும் மணியம் கட்ட வீதியிலும் வீதித்தடை போடப்பட்டிருந்தது.

இத்தடையினால் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட பொதுஜன அபிப்பிராயத்தையடுத்து ஆரியகுளச்சந்தியில் போடப்பட்டிருந்த வீதித்தடை அகற்றப்பட்டு விக்னா கல்வி நிலையத்திற்கு முன்பாகவும் வெலிங்டன் சந்தியில் போடப்பட்ட வீதித்தடை DCM கல்வி நிலையத்திற்கு முன்பாகவும் அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு எற்பட்டிருந்த பயணத்தடை ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து-133)

## நேரமாற்றத்தால் பயணிகள் அவதி

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் அமுல்படுத்தப்பட்ட பஸ் சேவை நேரமாற்றத்தால் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்.நகர் வரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் அலுவலக நேரமாற்றத்துக்கு அமைய இலங்கைப் போக்குவரத்துச் சபையும் தனது பஸ் சேவைகளை அரை மணித்தியாலம் முன் நகர்த்தியுள்ளது.

இதன்படி ஊர்காவற்றுறையில் இருந்து காலை 7 மணிக்குச் செல்லும் வழி. இல. 777 பஸ் காலை 6.30 மணிக்கும், காலை 7.30 மணிக்குச் செல்லும் வழி.இல.780 பஸ் 7 மணிக்கும் புறப்பட்டு யாழ்.நகரை வந்தடைகிறது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் மக்கள் காலை 7 மணிக்குப் பின்னரே வீதிக்கு இறங்குகின்றனர். இந்தநிலையில் பஸ் சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டிருப்பது பயணிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-72)

## மாணிக்கவாசகர் குருபூசை

(நெல்லியடி)

அல்வாய் சாமணந்தறை அருள்மிகு ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று மாணிக்கவாசகர் குருபூசை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட பூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவும் திருவாதவூரடிகள் புராண படிப்பும் இடம்பெறவுள்ளன. (க-9)

# "பேய்" குடியிருக்க கட்டப்படும் வீடு!

பேய் வசித்து வருவதாக கிராம மக்களால் நம்பப்பட்ட பழங்கால மரமொன்று சரிந்து விழுந்ததையடுத்து அதில் வசித்ததாக கூறப்பட்ட பேய் குடியிருப்பதற்காக கிராம மக்களே வீடு கட்டும் சம்பவமொன்று மத்திய பிரதேசத்திலுள்ள கிராமமொன்றில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரதேசத்திலுள்ள மதன்புரா என்ற கிராமத்தில் பழங்கால மரமொன்று இருந்தது. இந்த மரத்தில் பேய் வசிப்பதாக மக்கள் நம்பியதால் மாலை வேளையிலும் நண்பகலிலும் அப்பகுதிக்கு யாருமே செல்வதில்லை.

இந்நிலையில் பேய் வசித்ததாக கூறப்பட்ட அம்மரம் அண்மையில் வீசிய புயற்காற்றினால் வேரோடு சரிந்து விட்டது.

பேய் வசிக்கும் மரம் கீழே விழுந்து விட்டதால் பேய்கள் ஊருக்குள் வந்துவிடும் என்று கிராம மக்கள் அஞ்சினார்கள். இதைத் தொடர்ந்து கிராம மக்கள் பலர் ஊரை விட்டே வெளியேறினார்கள்.

இதற்கிடையே கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தனது கனவில் பேய் வந்து 'தனக்குத் தனியாக வீடு கட்டிக் கொடுத்தால் ஊருக்குள் அட்டகாசம் செய்யமாட்டேன் என்று சொன்னது' என்று கூறியுள்ளார்.

இதை நம்பிய கிராம மக்கள் தற்போது பேய்க்காக வீடு கட்டும் பணியைத் தொடங்கியுள்ளனர். இதற்காக வீடு வீடாகப் பணம் வசூல் செய்துள்ளனர்.

இதுபற்றி கிராமத் தலைவர் அக்வேஷ் புரோசித் கூறும்போது கிராம மக்கள் பலரின் கனவில் பேய் வந்து வீடு கட்டித் தரும்படிக் கேட்டுள்ளது. எனவேதான் வீடு கட்டுகிறோம். பேய் இருக்கிறது என்று நாங்கள் முழுதுமாக நம்புகிறோம். எங்கள் மக்களுக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே இதைச் செய்கிறோம் என்றார். (க-7)

# அங்குரார்ப்பண நிகழ்வும் அடிக்கல் நாட்டலும்

குவைத் செம்பிறைச் சங்கத்தினால் அன்பளிப்பாக தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினூடாக வழங்கப்பட்டு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கரவெட்டி அத்துளு குடிநீர் விநியோக நீர் சுத்திகரிப்பு இயந்திர அங்குரார்ப்பண வைபவமும் கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவும் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷும், சிறப்புவிருந்தினராக கொழும்பு தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.பாலச்சந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை முகாமையாளர் ரி.பாரதிதாசன் யாழ்ப்பாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகனேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-9)

# சட்டவிரோத மணல் அகழ்வு

(துனங்கிளப்பு)

கோயிலாக்கண்டி, வேலம்பிராய் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதிகளில் மணலை அகழ்வதற்கு பொதுமக்களினால் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டதால் கடந்த மாதங்களில் குறைந்திருந்த மணல் அகழ்வு நடவடிக்கைகள் தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மணல் அகழ்வு நடவடிக்கைகளை பொலிஸார் தடுத்து நிறுத்தவேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளதுடன் இப்பகுதிகளில் பெருமளவு மணல் அகழப்படுவதால் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (க-21)

# விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான திணைக்களம், கல்வி ஆய்வு முறையியலில் இரு வேறு பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி ஆய்வு முறையியலின் சான்றிதழ் கற்கை நெறியானது ஆறு மாத காலத்தை கொண்டது.

ஜனவரி 2007இல் ஆரம்பமாகி வார இறுதி நாட்களில் மாத்திரம் இந்த கற்கை நெறி நடைபெறும்.

அடுத்த பயிற்சி நெறியானது கல்வி ஆய்வு முறையியல் குறிப்பிட்ட துறைக்கான செயல்நிலை ஆய்வு நெறியாகும்.

இந்தக் கற்கை நெறி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 26, 27ஆம் திகதிகளிலும் அளவுசார் தரவுப் பகுப்பாய்வு ஒக்டோபர் மாதம் 28, 29ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

இரண்டிற்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுவதாக தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஜே.டபிள்யூ விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 20ஆம் திகதி திகதியாகும். (க-7)

# 40 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்

வவுனியா பொது மருத்துவமனையில் கடமையிலிருந்த 40 சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான உத்தரவினை திருகோணமலை மாவட்ட சுகாதார அமைச்சு விடுத்துள்ளது.

கடந்த 5 ஆண்டு காலமாக ஒப்பந்த அடிப்படையிலேயே இந்த சுத்திகரிப்பு தொழிலாளர்கள் கடமையாற்றி வந்தார்கள்.

இந்த நிலையில் புதிய தொழிலாளர்களை திருகோணமலை மாகாண சுகாதார அமைச்சு பணியில் அமர்த்துவதற்கு ஏதுவாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய குறித்த ஊழியர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து புதிய நியமனம் வழங்குவதை விட ஏற்கனவே பணியில் உள்ளவர்களை நியமிக்குமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டிருப்பதாக பாதிக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

## இன்று ஒரு தகவல்

# தோழர் ஜீவா

ஒருமுறை பம்பாய் தமிழ்ச்சங்கத்தில் பாரதி விழா நடந்து கொண்டிருந்தது. அந்த விழாவில் கலந்துகொள்வதற்காக தமிழ் நாட்டிலிருந்து ஒருவர் அங்கே போயிருந்தார். நான்கு நாள் அங்கு தங்கியிருந்து வெவ்வேறு இடங்களில் தமிழ்ச் சங்க விழாவில் இவர் பேசவேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கச் செல்வதற்கு முன் இவர் தன்னுடைய வேட்டிய்ய துவைத்துக் காயப்போட்டுவிட்டுப் படுத்துக்கொள்வார். மறுநாள் காலையில் அந்த வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு விழாவில் பேசப் போய்விடுவார். இவர் ஏன் இப்படிச் செய்தார் என்றால் அவரிடம் அப்போது இருந்தது ஒரே ஒரு வேட்டிதான்.

இதை அங்கிருந்த தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் போய் பன்னிரண்டு மில் வேட்டிகளை வாங்கிக் கொண்டுவந்து அவருக்குப் பரிசாகக் கொடுத்தனர். இவர் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. பேசாமல் வாங்கி வைத்துக்கொண்டார். ஆனால் அதையெல்லாம் என்ன செய்தார். தெரியுமா? மும்பையை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு அந்த வேட்டிகளையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு மெட்ராசுக்கு ரயில் ஏறினார்.

அந்தப் பெரிய மனிதர் யார் தெரியுமா? அவர்தான் தோழர் ப.ஜீவானந்தம். ஆரம்ப காலத்தில் அவர் செட்டிநாட்டில் சிறாவயலில் காந்தி ஆசிரமம் நடத்திக்கொண்டிருந்தார். அப்போது மகாத்மாகாந்தி அந்த ஆசிரமத்திற்கு ஒருமுறை வந்திருந்தார். ஆசிரமம் சூழ்நிலை காந்திஜிக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆசிரமத்தின் பொருளாதாரநிலை எப்படி இருக்கிறது என்று விசாரித்தார். என்ன சொத்து இருக்கிறது என்று கேட்டார்."இந்தத் தேசம் தான் என்னுடைய சொத்து" என்றார் ஜீவா. உடனே காந்திஜி இல்லை .... இல்லை.... நீங்கள்தான் இந்தத் தேசத்தின் சொத்து என்றார். இப்படி காந்திஜியால் அடையாளம் காணப்பட்ட ஜீவா ஒரு சிறந்த சொற்பொழிவாளர்.

அவர் ரஷ்யப் புரட்சியை விளக்குவதற்காகச் சொன்ன ஒரு குட்டிக்கதை மிகவும் பிரபலம். அது என்னவென்றால் ஒரு ஊரில் ஒரு பூதம் இருந்தது. அது வயலை உழுதது. விவசாயம் செய்தது. காலா காலத்தில் களை எடுத்தது. நல்ல விளைச்சல்...அறுவடை செய்தது. தானியம் குவிந்தது. இருந்தாலும் அந்தப் பூதமும் அதன் குடும்பமும் உப்பில்லாத கூழைத்தான் குடித்தது. அந்தப் பூதம் நிறைய வீடுகளைக் கட்டியது. மாடமாளிகைகளைக் கட்டியது. ஆனால் அதுவும் அதன் குடும்பமும் ஒரு சாதாரண குடிசையில் தான் இருந்தது.

அந்தப் பூதம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் கட்டியது. ஆனால் அந்தப் பூதத்திற்கும் அதன் குடும்பத்திற்கும் எழுத்து வாசனையே கிடையாது. அது பாஞ்சாலைகளில் வேலை செய்து நிறைய துணிமணிகளை உற்பத்தி செய்தது. ஆனால் அதுவும் அதன் குடும்பமும் கிழிந்த துணியைத்தான் கட்டியிருந்தது. அந்தப் பூதம் செய்யும் வேலைகள் அதிகம். ஆனால் அது எலும்பும் தோலுமாக இருந்தது. அதன் குடும்பம் வறுமையில் வாடியது.

அந்த ஊரில் ஒரு நல்ல மனிதர் இருந்தார். "இந்தப் பூதம் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறது. ஆனால் இதன் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறதே" என்று நினைத்தார். அருகில் போய் உற்றுப்பார்த்தார். அந்தப் பூதத்தின் இரண்டு கண் இமைகளும் வீங்கிப் போய் பார்வையில் முக்கால்வாசியை மறைத்திருந்தது. உடனே தனது கையில் வைத்திருந்த ஒரு கருவியால் அந்த இமைகளை தூக்கிவிட்டார். இப்போதுதான் அந்தப் பூதத்தின் பார்வைக்கு எல்லாம் பளிச்சென்று தெரிந்தது.

உற்பத்தி செய்பவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று யோசிக்க ஆரம்பித்தது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். அதற்காகப் பாடுபடுவேன் என்று வீரமுழக்கமிட்டது அந்தப் பூதம்.யார் இந்தப் பூதம்? உழைக்கும் தொழிலாளர்களும்,விவசாயிகளும் தான் இந்தப் பூதம்! சமூக சூழ்நிலை அதன் கண்களை மறைத்திருந்தது. அது விலக்கப்பட்டது. சமதர்மம் வந்தது. இதுதான் அவர் சொன்ன பூதக்கதை இன்னொருவர் உழைப்பைச் சுரண்டுவதுதான் திருட்டிலேயே மிகப்பெரிய திருட்டு.

ஒரு பெரிய சந்தை ஆடு,மாடு,கழுதை, குதிரையெல்லாம் அங்கு விற்பனைக்கு வருவது வழக்கம். ஒரு பெரிய மனிதன் அங்கே நிறைய கழுதைகளைக் கொண்டுவந்து விற்பது வழக்கம். மற்றவர்கள் விற்கும் விலையை விட மிகவும் குறைந்த விலைக்கு இவர் விற்பார்.ஒரு கழுதையை 100 ரூபாவிற்கு விற்றுக் கொண்டிருந்தார்.

"அது எப்படி இவ்வளவு குறைந்த விலைக்கு உங்களால் இதை விற்க முடிகிறது?" என்று கேட்டார் இன்னொருவர். "அது ஒன்றுமில்லை... இந்தக் கழுதையை கவனித்துக்கொள்ளும் வேலைக்காரனுக்கு நான் சம்பளம் கொடுப்பதில்லை. அதற்கு வேண்டிய ஆகாரத்தை காசாகக் கொடுத்து வாங்குவதில்லை... திருடிக் கொண்டு வந்துதான் போடுவோம். அதனால் எனக்கு இந்தக் கழுதையின் அடக்க விலையே குறைவாகப் போய்விட்டது. அதனால் தான் ஒரு கழுதை 100 ரூபா விலைக்கு விற்க முடிகின்றது" என்று கூறினார் அவர்.


"அப்படியென்றால் என் கழுதை 25 ரூபாவுக்கு விற்க நான் தயார்"என்றார் இவர். "அது எப்படி முடியும்?" என்றார் அவர். "ஐயா நீங்கள் கழுதையை வளர்ப்பதற்குத் தேவையான உழைப்பையும் ஆகாரத்தையும் திருடுகிறீர்கள். நான் கழுதையையே திருடுகிறேன். அதுதான் இதில் உள்ள இரகசியம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஈழத்தமிழ் மக்களை அகதிகளாக்குவதுதான் சிங்களவர்களை பாதுகாக்கும் வழிமுறையா?

## இரா.சம்பந்தன் எம்.பி கேள்வி

(திருகோணமலை)



**தமிழர்களை அகதிகளாக்குவது தான் சிங்களவர்களை பாதுகாக்கும் வழிமுறையா? என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார். அவர் அளித்த நேர்காணலில் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி முயற்சிகளில் இருந்து விலகவில்லை. நோர்வே எழுப்பிய கேள்விகளுக்குத்தான் பதிலளித்துள்ளனர்.

ஆகையால் அதில் எதுவித சந்தேகமுமில்லை. ஹெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்தைப் போல் தான் ஊர்காவற்றுறை, பேசாலை மற்றும் திருமலையில் மாணவர்கள் கொல்லப்பட்டதையும் கருதவேண்டும். அமைதி முயற்சிகளுக்கு சாதகமாகவும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கம் நிறுத்தினால் அதேவகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுவார்கள். பேசாலையில் தேவாலயத்தின் மீது கைக்குண்டை படையினர் வீசியுள்ளனர். கடற்கரையில் சிலரை சுட்டுக் கொன்றுள்ளனர். 50 கண்ணாடியிழைப் படகுகளை எரித்துள்ளனர். இந்தக் கொடூரத்தை எப்படி அரசு நியாயப்படுத்தும்?

கடந்த இரு மாதங்களில் வடக்கு-கிழக்கு நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. இந்தப் பகுதிகளில் இருந்து பெருந்தொகையான மக்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

தங்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தங்களது வீடுகளை கைவிட்டு விட்டு அகதிகளாகச் சென்றுவிட்டனர்.

இந்தப்பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்ல முடிவதில்லை. பொதுமக்கள் தொழிற் செயற்பாடுகளை மேற்கொள்ள முடிவதில்லை. ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை அரசு அனுமதித்திருந்தால் மறுசீரமைப்பு புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை தடுத்த சக்திகள் தான் இப்போதைய நிலைமைகளுக்கு பொறுப்பு. இந்த சக்திகள் அரசாங்கத்தில் இருப்பது கவலையளிக்கிறது.

அமைதி முயற்சிகளுக்கு ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் தடையாக இருக்கின்றனர். இவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை பறித்துவிட்டு சிங்களவரை பாதுகாக்கவேண்டும் என்று கருதுகிறார்களா? தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களை தங்களது வீடுகளிலிருந்து முகாம்களுக்கு இடம் பெயரவைப்பது தான் சிங்களவர்களை பாதுகாக்கின்ற வழிமுறையா?

இதைத்தான் புத்தமதம் கற்பிக்கிறதா? இலங்கை இனப்பிரச்சினையை பொறுத்தவரையில் இந்தியா ஒரு முக்கிய காரணி என்பதில் கேள்வியே தேவையில்லை. இந்தியாவின் பங்களிப்பு என்பது அவசியமானது என்பது உண்மை என்றார். (க)

# புலிகளின் நிதி சேகரிப்பு இடம்பெறுவதில்லை என்பதை கனடா அரசு உறுதிப்படுத்தவேண்டும்

## என்கிறார் ஜயந்த தனபால



(கொழும்பு)

கனடா அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்தால் மட்டும் போதாது. நிதிசேகரிப்பு நடைபெறவில்லை என்பதை உறுதி செய்யவும் வேண்டும் என்று இலங்கையின் சார்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடும் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இலங்கையரசின் சமாதான செயலகத்தின் முன்னாள் செயலாளரான ஜயந்த தனபால கனடாவின் தலைநகரான ஒட்டாவவில் உள்ள ஊடகம் ஒன்றுக்கு இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த சூழலில் அனுகூலம் பெற்றுக்கொண்டு கொழும்பில் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துகின்றனர். ஒரு தரப்பினரிடம் தீர்வுக்கான விருப்பம் இருக்கிறது என்பது எனக்கு தெரியும். ஆயினும் அது மறுதரப்பினரிடமும் ஏற்படுத்தப்படவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியொன்றை செய்ய வேண்டியிருக்கிறது. இவர்களே விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு நிதிகளை வழங்கி வருபவர்கள் .

இவற்றைக் கொண்டு புலிகள் கொள்வனவு செய்யும் ஆயுதங்களே அப்பாவி மக்களை கொன்றொழிக்க உதவுகின்றன.

கொடூர யுத்தத்தில் சிறுவர்களை ஆயுதபாணிகளாக்கிவிடுமளவுக்கு முன்சென்றுள்ளன என்று ஜயந்த தனபால மேலும் தெரிவித்தார். (க-6)

# இலங்கைக்கான இந்திய இராணுவ உதவியை தடுக்க கோரி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதங்களை அனுப்புங்கள் !

## திராவிடர் கழகத் தலைவர் தமிழ் அமைப்புக்களிடம் வேண்டுகோள்

(சென்னை)



இலங்கைக்கான இந்திய இராணுவ உதவியை தடுக்கக் கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதங்களை அனுப்ப திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்னையில் நேற்று முன்தினம் இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் ஜனாதிபதிக்கு அறிவுரை கூறும் வகையிலும் இந்தியாவின் நிலைப்பாடு நடுநிலை சமரச மனப்பான்மை தான் என்று காட்டும் வகையிலும் பேச்சுவார்த்தைகள் மூலம் நீண்டநாள் சிக்கலை இருதரப்பும் அணுக வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியதை நாம் வரவேற்கிறோம்.

இதுவரை பிரதமர் அளவில் இந்தப் பிரச்சினை குறித்து யாரும் வாய் திறக்காத நிலையில் நம் பிரதமர் மன்மோகன் சிங்தான் முதன் முதலில் இலங்கை அரசுக்கு மிகவும் தைக்கும்வகையில் அரசியல் தீர்வு காணவேண்டிய இப்பிரச்சினை இராணுவ நடவடிக்கைகளால் தீர்த்துவிட முடியாது என்று கூறியிருந்தார்.

அங்கே உள்ள சிங்கள இராணுவத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளாரா அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் அவர் இருக்கிறாரா? என்பது எளிதில் காணமுடியாத சூழ்நிலையே அரசியல் நோக்கர்களுக்கு அங்கு உள்ளது.

தமிழர்களை ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கு அழைத்து கொண்டே அங்குள்ள இராணுவம் இரு முனை தாக்குதலை மறுபுறம் நடத்துகின்றது. ஒரு முனையில் இராணுவத்தின் குண்டு வீச்சு (தேவாலயங்களில் நுழைந்து மக்கள் மீது குண்டு வீச்சு) மற்றொரு முனையில் கருணா என்ற விடு தலைப் புலிகளுக்கு எதிரான ஒரு அமைப் புக்கு ஆயுத உதவி உட்பட எல்லாம் செய்து அவர்களை விட்டும் தாக்கு தலை தொடரச் செய்யும் போது ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக்கேடயமான விடுதலைப் புலிகள் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க இயலாதது தானே!

இராணுவ நடவடிக்கைகளால் ஈழத் தமி ழர் பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காண முடியாது என்று பிரதமர் கூறிடும் நிலையில் இலங்கை அரசுக்கு ராடர் போன்ற இராணுவத்திற்கு உதவக் கூடிய பல கருவி களை அனுப்பும் செயல் அப்பட்டமான தமிழர் விரோத நடவடிக்கை அல்லவா?

தலையிடமாட்டோம் என்றால் அதையாவது முறையாகக் கடைப்பிடிக்க வேண்டாமா? இரு தரப்புகள் போர் நிறுத்தத்தை மீறும் நிலையில் ஒரு தரப்புக்கு இராணுவ உதவி செய்வது என்பது எவ்வகையில் நியாயம் ஆகும்.

எனவே இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை உடனே நிறுத்த வேண்டும். தமிழ் நாட்டுத் தமிழர்கள் மட்டுமன்றி உலகத் தமிழர்களின் உணர்வுகளை நாம் ஒட்டு மொத்தமாக பிரதிபலித்து இதைக் கூறுகிறோம் . தமிழக அரசும் முதல்வரும் மத்திய அரசுக்கு இதனை வற்புறுத்த வேண்டும்.

இதனை வலியுறுத்தி இந்தியாவில் ஆங்காங்குள்ள தமிழர் அமைப்புக்களும் கழக கிளைகளும் இந்தியப் பிரதமருக்கு ஏராளமான தந்திகள், தொலைப்பதிவு செய்திகளை அனுப்பிட வேண்டுகிறோம் என்று வீரமணி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (க)




# இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது யார்?

(பெர்லின்)

உலக கோப்பை கால்பந்து தொடரில் முதல் இரண்டு சுற்றுகள் முடிவடைந்த நிலையில் இன்று முதல் ஆரம்பமாகும் காலிறுதிப் போட்டிக்கு எட்டு அணிகள் தகுதி பெற்றுள்ளன.



இவற் றிலிருந்து நான்கு அணிகள் அரையிறுதிப்போட்டிக்கும் இரு அணிகள் இறுதிப் போட் டிக்கும் முன்னேறும்.

முதல்இரண்டு சுற்றுகளை முடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ள அணிகள் அனைத்தும் ஓரளவுக்கு திறமையான அணிகளே. உக்ரைன்மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அணி கள் காலிறுதிப் போட்டியில் நுழைந் திருப்பதை அந்த அணிகளா லேயே நம்பமுடிய வில்லை.

இரண்டு சுற்று முடிந்த நிலையி லும் கூட இங்கி லாந்து அணி ஒரு பெரிய வலுவான அணியைஎதிர் கொண்டு வெற்றி பெறுமாஎன்று இன்னும் உறுதி யாகக் கூற முடி யாத நிலைதான் உள்ளது.

காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியை இங்கிலாந்து வென்று அரையிறுதியில் நுழைந்தால் ... அங்கு அந்த அணி பிரே சில் அல்லது பிரான்ஸ்அணியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அரையிறுதியில் பிரேசிலை சந்திக்கத்தான் இங்கிலாந்துக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அப்படியா னால் இறுதிப் போட்டிக்கு நுழைவது என்பது இங்கிலாந்து அணிக்கு மிகக் கடினம். ஒருவேளை இங்கிலாந்தை வீழ்த்தி போர்த்துக்கல் அரையிறுதிக்கு தகுதி பெறும் பட்சத்தில் அந்த அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுமா என்பதும் கடினம்தான்.

காலிறுதி சுற்றில் பிரான்ஸை பிரேசில் வெல்லும் பட்சத்தில் அரையிறுதியில் இங்கிலாந்து அல்லது போர்த்துக்கலை அந்த அணி சந்திக்கும். அப்படி சந்திக்கும் பட்சத்தில் இரண்டு அணிகளில் எது வந்தாலும் வீழ்த்துவது பிரேசிலுக்கு தற்போது பெரிய காரியமல்ல. ஒருவேளை எதிர்பாராத விதமாக பிரான்ஸ் வெற்றி



பெறும் பட்சத்தில் அந்த அணி இங்கிலாந்து அல்லது போர்த்துக்கலை சமாளிக்க வேண்டியிருக்கும். அது வேறு கதை.

இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் அணியாக இந்த நான்கு அணிகளிலிருந்து (இங்கிலாந்து, போர்த்துக்கல், பிரேசில் மற்றும் பிரான்ஸ்) அதிக வாய்ப்பு பிரேசிலுக்குத்தான் இருக்கிறது.

எதிர்புறத்தில் ஜேர்மனி, ஆர்ஜென்டினா, இத்தாலி மற்றும் உக்ரைன் ஆகிய அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. ஆர்ஜென்டினா மற்றும் ஜேர்மனி மோதும் போட்டியில் இருவரில் ஒருவருக்குத்தான் வாய்ப்பு என்பது ஏற்கனவே ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தி விட்டது. இந்த காலிறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டி வரை எளிதாக முன்னேறி சென்று விடும் என்பது ரசிகர்களுக்குத் தெரிந்தது தான்.

### முன்னோட்டம்

ஜேர்மனி அல்லது ஆர்ஜென்டினா ஆகிய இரு அணிகளில் எந்த அணி வெற்றி பெறும் என்பது தான் இந்த உலக கோப்பையில் விடை காண முடியாத ஒரு கேள்வி. எனவே இரு அணிகளில் எந்த அணி அரையிறுதிக்கு முன்னேறும் என்பதை கணிக்க முடியாது. ஆனால் இத்தாலி, உக்ரைன் மோதும் போட்டியில் இத்தாலிக்கு கொஞ்சம் வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

இந்த உதைபந்தாட்ட தொடரில் தான் அறிமுகமான உக்ரைன் அணி காலிறுதியை தாண்டுமா என்பது பெரிய கேள்விக் குறியே. அரையிறுதிப்போட்டியில் இத்தாலி, ஆர்ஜென்டினா அணியை அல்லது ஜேர்மனி அணியையே சந்திக்கும். ஆகவே இவ் விரு அணிகளையும் தாண்டி இறுதிப் போட்டிக்கு இத்தாலி நுழைவது என்பது மிகக் கடின மான காரியம். இப்போதுள்ள நிலையில் இறுதிப் போட்டியில் பிரேசில், ஜேர்மனி அல்லது பிரேசில், ஆர்ஜென்டினா மோதும் என்று எதிர் பார்க்கலாம்.



**அமிர்தன்**

| 2ஆம் சுற்று | காலிறுதி | அரையிறுதி | இறுதி | அரையிறுதி | காலிறுதி | 2ஆம் சுற்று |
|---|---|---|---|---|---|---|
| ஜேர்மனி | | | | | | இங்கிலாந்து |
| சுவிற்சர்லாந்து | ஜேர்மனி<br>ஜூன் 30<br>இரவு 8.30 | | | | இங்கிலாந்து<br>ஜூலை 1<br>இரவு 8.30 | ஈகுவடோர் |
| ஆர்ஜென்டினா | ஆர்ஜென்டினா | ? | ? | ? | போர்த்துக்கல் | போர்த்துக்கல் |
| மெக்சிகோ | | ஜூலை 4<br>இரவு 12.30 | ஜூலை 9<br>இரவு 11.30 | ஜூலை 5<br>இரவு 12.30 | | நெதர்லாந்து |
| இத்தாலி | இத்தாலி<br>ஜூன் 30<br>இரவு 12.30 | ? | ? | ? | பிரேசில்<br>ஜூலை 1<br>இரவு 12.30 | பிரேசில் |
| அவுஸ்திரேலியா | | | | | | கானா |
| சுவீடன் | | | | | | ஸ்பெயின் |
| உக்ரைன் | உக்ரைன் | | | | பிரான்ஸ் | பிரான்ஸ் |

## சிறப்பான அணிகள்

முதல் மற்றும் இரண்டாவது சுற்றுப் போட்டிகளின் முடிவில் ஆர்ஜென்டினா, பிரேசில், ஜேர்மனி ஆகிய முன்று அணிகள் 10 கோல் அடித்து முதல் இடத்தை தட்டிச் சென்றன. 4 போட்டிகளில் விளையாடி உள்ள ஸ்பெயின் அணி 9 கோல்கள் அடித்து இரண்டாவது இடத்தைப் பெற்றது. அதிக கோல்கள் அடித்த அணிகள் வருமாறு:

| அணி | போட்டி | கோல் |
|---|---|---|
| பிரேசில் | 4 | 10 |
| ஆர்ஜென்டினா | 4 | 10 |
| ஜேர்மனி | 4 | 10 |
| ஸ்பெயின் | 4 | 9 |
| பிரான்ஸ் | 4 | 6 |
| இத்தாலி | 4 | 6 |
| போர்த்துக்கல் | 4 | 6 |
| ஈகுவடோர் | 4 | 5 |
| மெக்சிகோ | 4 | 5 |
| இங்கிலாந்து | 4 | 5 |
| உக்ரைன் | 4 | 5 |

## தண்டிக்கப்பட்ட அணிகள்...

மோசமான செயல்பாடுகளால் கானா அணி அதிகமுறை போட்டி நடுவரால் தண்டிக்கப்பட்டுள்ளது. 4 போட்டிகளில் விளையாடி உள்ள கானா 18 மஞ்சள் அட்டை மற்றும் 1 சிவப்பு அட்டை பெற்றுள்ளது. அதிகமுறை மஞ்சள் அட்டை, சிவப்பு அட்டை பெற்ற அணிகள்:

| அணி | போட்டி | மஞ்சள் அட்டை | சிவப்பு அட்டை |
|---|---|---|---|
| போர்த்துக்கல் | 4 | 18 | 2 |
| கானா | 4 | 18 | 1 |
| நெதர்லாந்து | 4 | 16 | 2 |
| துனிசியா | 3 | 14 | 1 |
| மெக்சிகோ | 4 | 12 | 1 |
| செர்பியா | 3 | 12 | 2 |
| சுவிட்சர்லாந்து | 4 | 12 | - |
| குரோஷியா | 3 | 11 | 2 |
| இத்தாலி | 4 | 9 | 2 |

# சுவாமி விவேகானந்தர்

## கருணையின் சரிதம்

பள்ளிப்படிப்பை விரும்பாத பாலன் கதாதரன் தெய்விகமான இசையிலும், தெய்வக்கதை களை விவரிக்கும் நாடகத்திலும் ஈடுபாடுகொண்டிருந்தான். நாடகத்தில் சிவவேஷம் தாங்கிய சிறுவன் தன் நினைவை இழந்து சிவத்திலேயே லயமானான். சஞ்சரித்துக்கொண்டேயிருக்கும் சாது ஜனங்களின் சங்கத்தில் குதூகலித்தான். தேவ தேவியரைத் தியானிக்கத் தொடங்கிய அளவிலேயே மனது குவிந்துவிடும் உயரிய நிலை கதாதரனுக்கு இரத்தத்திலேயே ஊறியிருந்தது.



க்ஷுதிராம் காலகதிக்கு இலக்கானார். குடும்பத்தின் வறுமை பயங்கரமாயிற்று. கல்வி கற்று ஏதேனும் ஒரு தொழிலை ஏற்று நடத்த வேண்டிய அவசியம் கதாதரனுக்கு ஏற்பட்டது. கல்கத்தாவில் சமஸ்கிருத பாடசாலை நடத்திக்கொண்டிருந்த தனது தமையனாரான இராமகுமாரைச் சென்றடைந்தான் பதினாறு வயது கதாதரன். அவர் அவனை லௌகிகக் கல்வி கற்குமாறு தூண்டினார். கதாதரன் சிந்திக்கலானான் பள்ளிப் படிப்பினால் நான் மேலும் தூய்மை பெறுவேனா? அது என் பக்தியை வளர்க்குமா? கடவுளுக்குப் பயந்து என் தந்தை எளிய வாழ்வு வாழ்ந்தாரே அதே போல நானும் வாழ இந்தக் கல்வி சிறிதேனும் உதவுமா? எல்லாவற்றுக்கும் மேலாக உலகத்தவரின் அஞ்ஞானத்தை யும், போக போக்கில் அபிலாஷையையும் வென்று பரம் பொருளை நுகர இந்த எழுத்தறிவு உபயோகமாகுமா?

'ஆகவே ஆகாது' என்ற உறுதியான மறுமொழியையும் கதாதரனின் உள்ளம் அளித்தது. அப்படியானால் எழுத்தறிவில் லாடினும் கடவுளைக் காணும் பாதையில் செல்வதேயல்லவா சாலச் சிறந்தது? என்று அவன் மனம் திடசங் கல்பம் பூண்டது.

சகோதரனிடம் கூறினான் கதாதரன்; 'ரொட்டியும், வெண்ணெயும் சம்பாதித்துத் தரும் படிப்பை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது என் இதயத்தில் ஒளியை நிரப்பி, எனக்குத் திருப்தியூட்டும் ஞானம் அல்லவா எனக்குத் தேவைப்படுகிறது?' இராமகுமார் என்ன விடை கூற முடியும்?

இந்தச் சமயத்தில் ராணி ராஸமணி என்ற செம்படவர் குலச்சீமாட்டி தட்சிணேசுவரத்தில் தேவி காளிக்கு ஓர் ஆலயம் எடுத்தாள். இந்த ஆலயத்தின் அர்ச்சகராக இராமகுமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். கதாதரனுடன் இராமகுமார் தட்சிணேசுவரம் வந்தடைந்தார்.

இராமகுமார் 1856ஆம் ஆண்டு காலமானார். அதன் பிறகு கதாதரரே காளிகோவிலின் அர்ச்சகரானார். அவரைப் போல ஓர் அர்ச்சகர் கிடைப்பதற்கு அம்பிகை அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

ஆலயத்தை அணைத்து ஓடும் பாகீரதியின் புனிதம், ஆலயச் சூழலின் அமைதி, அம்பிகையின் அருள் விலாசம் இவையெல்லாம் கதாதரனினுள் ஊறத் தொடங்கின. இளைஞன் பக்தனானார். பக்தா துறவியானார்; துறவி முனிவரானார். முனிவர் ஞானி ஆனார். ஞானி அனுபூதி செல்வரானார் இவையாவும் ஈராறு ஆண்டுகளில் நிகழ்ந்த அற்புதமாகும். மெய்ப்பொருளின் தன்மையை அனுபவித்து, அது தானே என்று ஓர்ந்ததும், தானேயான அந்தத் தத்துவத்தைத் தாயாக நேரில் கண்டு பேசி, பூஜித்து உள்ள நிறைவு கண்டதும் ஸ்ரீராம கிருஷ்ணரின் மகத்தான அனுபவங்களாகும். ஆம் கதாதரர்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணராகிவிட்டார். இராமன் எப்படி நடந்து காட்டினானோ அதைப் பின்பற்றுங்கள்; கிருஷ்

## அத்தியாயம் - 10

ணன் என்ன உபதேசித்தானோ அதை அனுசரி யுங்கள் என்று சொல்வதுண்டு தமது உபதேசம், நடவடிக்கை இரண்டையும் மாந்தர் பின்பற்றும்படி வாழ்ந்த கதாதரர் இராமனும் கிருஷ்ணனும் இணைந்த இராமகிருஷ்ணராகவே பக்தர்களுக்குத் தோன்றினார்.

ஆத்மாநுபவம் பெறவேண்டும் என்பதில் கதாதரருக்கு இருந்த துடிப்பையும், அந்த அநுபவத் தடாகத்தில் முழுகுவதற்காக உலக இச்சைகளைப் பாசியைத் தள்ளுவது போலத் தள்ளிய பக்குவத்தையும், அந்தரங்க சுத்தத்தையும் மன ஒருமைப்பாட்டையும், அவர் உற்றபரவச பரமானந்த நுகர்ச்சிகளையும் எழுத்தில் கொண்டு வருவது இயலவே இயலாத காரியமாகும்.

ஆரம்ப காலத்தில் அவர் சமய நூல்களை அறிந்திருக்க வில்லை. நானாவித ஆன்ம சாதனை களின் நுணுக்கங்களை அறிந்திருக்க வில்லை. அவருக்கு முறைப்படி உபதேசம் கூறி வழிகாட்டுபவர்களும் அப்போது இல்லை. எனினும் அவரிடமே அற்புதமான ஏதோ ஒன்று இருந்தது.

அம்பிகையைக் காண வேண்டும் என்று அவர் உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து பிரவகித்த ஆர்வம்தான் அது. 'அழுதா லுன்னைப் பெறலாமே' என்று மணிவாசகர் கூறியவாறு நெட்டுயிர்த்துக் கதறி அழத் தெரிந்திருந்தார் கதாதரர். சின்னஞ்சிறு குழந்தை தாய்க் காக எப்படி அலறுகிறதோ அப்படியே தெய்வத்தாயின் தரிசனத்துக்காக அலறினார் கதாதரர்.

அதிகாலையின் கோமள மான குளிரொளியில் கங்கைத் தடத்தோடு நடந்து செல்வார் கதாதரர் - தேவியின் நினைவே நிறைந்தபடி பகலெல்லாம் பூஜையிலும், பஜனையிலும், பிரார்த்தனையிலுமே செல்லும். மாலையின் நளினமான தண்ணொளியில் மீண்டும் கங்காதீரத்தோடே சஞ்சரிப்பார் கதாதரர். அம்பிகையின் எண்ணமே உள்முழுதும் பூரித்தபடி அப்புறம் இரவு முழுவதும் தியானம்தான்.

இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் திவ்விய தரிசனத்துக்காகவே தவமிருந்தார் கதாதரர். அந்த தரிசனம் மட்டும் கிட்டிய பாடில்லை. தவத்தின் உக்கிரமும் ஏறியது. ஆகா இன்னும் ஒருநாள் சென்று விட்டது! அம்மா நான் உன்னைக் காணவில்லை. என் அல்ப ஆயுளில் மேலும் ஒரு தினம் கழிந்து விட்டது. நான் சத்தியத்தைத் தரிசிக்கவில்லை பொழுது வீணாகிறது. ஐயோ வீணாகிறதே!' என்று அரற்றித் துடியாகத் துடித்தார் கதாதரர்.

நீ அன்னையாக இருந்தால் என்னை இப்படித் தவிக்க விடுவாயா? அப்படியானால் அம்பிகையே கிடையாதா? நீ ஒரு கற்பனைதானா? மதம் என்பது ஒரு மாயம் தானா? என்றெல்லாம் நெஞ்சம் உருகக் கேட்பார் கதாதரர். உடனேயே ஞானியர்களும் பக்தர்களும் அவரது மனக்கண் முன் வரிசை வரிசையாக வந்து நிற்பார்கள். சத்தியத்தைத் துய்த்த அந்த அறிவுச் செல்வர்களையும் அம்பிகையைக் கண்ட அந்த அன்புச் செல்வர்களையும் நினைந்தவுடன் அவரது ஐயங்கள் ஒளியின் முன் இருளாக நீங்கும். தவக் கனலை மேலும் விசிறி உக்கிரமாக்குவார்.

ஒருநாள் அவரால் தாங்கொணாத துயரம் அவரை நெரித்தது. 'கடவுளைக் காணாமல் இதென்ன வாழ்க்கை? தெய்வத்தைப் பாராமலே எதற்காக உயிர் வாழ வேண்டும்?' என்ற எண்ணம் கொழுந்து விட்டெறிந்தது. உடலில் உயிர் தரிக்க முடியாமல் நிலை தடுமாறிய கதாதரர் பவதாரிணியின் சந்நிதிக்கு வந்தார். அங்கு தொங்கிக் கொண்டிருந்த வாளைக்கையில் எடுத்துக்கொண்டார்.

இன்னும் ஒரு விநாடிதான் இந்தப் பாடு! அப்புறம் அந்த வாள் அவருக்கு அமைதி அளித்துவிடும்.

அந்த ஒரு விநாடிக்குள் மகத்தான சம்பவம் நடந்துவிட்டது. எந்தச் சம்பவத்துக்காகக் கதாதரர் வேக்காட்டில் வெந்து கொண்டிருந்தாரோ அந்த சம்பவம் நிகழ்ந்ததே விட்டது.!

சந்நிதி முழுவதும் பரமபாவனமானதோர் ஒளிபாய்ந்தது. அந்த ஒளி எங்கிருந்து வந்தது? இதோ இந்தப் பவதாரிணியிடமிருந்தே தான் வந்தது. ஆம்?, அங்கு பவதாரிணியின் விக்கிரகம் நிற்கவில்லை, பவதாரிணியே நின்றாள்.

காளி கறுப்பானவள்-என்று தான் அவளுக்குப் பெயர் அவளே தன் திவ்வியமான அங்கங்களிலிருந்தெல்லாம் ஒளி பாய, அந்த ஒளியிலேயே அந்த அங்கங்களின் அழகு முழுவதும் துலங்க ஆனந்த தரிசனம் அளித்தாள். அஞ்ஞானிகளுக்குக் கறுநிறத்தவளாகத் தோன்றும் காளி மாதா ஞானியான கதாதரருக்கு ஒளிமயமாகக் காட்சி அளித்தாள் எட்ட இருந்து பார்க்கும் போது கடல் நீர் கருநிறமாகத் தெரிகிறது. கையில் எடுத்தாலோ? நமக் கெல்லாம் எட்ட இருக்கும் அன்னைத் தெய்வம் அப்படித் தான் கதாதரரின் கைக்கருகே வந்து விட்டாள்!

ஆன்மீகப் பாதை
ரா.கணபதி

* * *

மக்கள் ஒருவரையொருவர் பார்ப்பது போல அம்பிகையை நேருக்கு நேர் கண்டபின் கதாதரர் தெய்விக போதையிலேயே ஆழ்ந்துவிட்டார். தேவியின் தரிசனத்துக்குப் பின் அகண்ட மானதோர் அதிசய சாம்ரஜ்யத்துக்குள் பிரவேசித்துவிட்டார்.

கதாதரர் பரவச நிலையிலும் சர்வசக ஜமான நிலையிலும் கூட அவர் கண்டறியாதன காணத் தொடங்கினார். தேவ சக்திகள் உருவெடுத்து வந்து அவருடன் உறவாடின. அவரும் அவற்றுடன் உரையாடி மகிழ்ந்தார்.

(தொடரும்)

# 4 சமுர்த்தி வலயங்களில் அபிவிருத்திப் பணிகள்!

### சமுர்த்தி அமைப்பும் ஜி.ரி.இசற்றும் இணைந்து மேற்கொள்ளும்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேசசெயலகத்தின் சமுர்த்தி அமைப்பினரும், ஜி.ரி.இசற் நிறுவனமும் இணைந்து தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள நான்கு சமுர்த்தி வலயங்களில் உள்ள கிராமங்களில் பல் வேறு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் வரணி வலயத்தில் யாழ்.மந்துவில் ஸ்ரீ பாரதி வீதி, ஓட்டக்குழிவீதி, ஆழ்வார் மடம் வீதி, தெருவாரப்பிள்ளையார் (நந்திக்குளம்) வீதிகள் திருத்தப்படவுள்ளன.

கொடிகாம வலயத்தில் J/324 கிராம சேவகர் பிரிவில் கச்சாய் பாலாவியிலிருந்து கொடிகாமம் வடக்கூடாகஎருவன்வயல்வெளிக்கு வாய்க்கால் அமைக்கப்படும். அத்துடன் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய A-9 வீதி, திருத்தப்படும்.

இதுதவிர சம்பாவெளி, ஈச்சங்காடு, எறியாப்பிட்டி பாலாவி, இத்தாவில், கட்டைபறித்தல், வேவில் ஆகிய இடங்களிலுள்ள மயானங்களில் ஆறுதல் மண்டபங்கள் அமைக்கப்படும். தவிர சாவகச்சேரி வலயத்தில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடம் அமைத்தல், நீர் விநியோக திட்டத்தை ஆரம்பித்தல், தண்ணீர் தாங்கியமைத்து விநியோகக் குழாய் அமைத்தல் போன்றன இடம்பெறும்.

மேலும் மட்டுவிலில் ஆரம்ப சுகாதார கட்டடம் புதிதாக அமைக்கப்படும். கைதடி வலயத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் குடிநீர்த்திட்டம் அமுல் படுத்தப்படும். தவிர பொது மண்டபம் அமைத்தல், வீதிகள் அமைத்தல் இடம் பெறும். குறிப்பாக மட்டுவில் வீதி, நவபுரம் ஊடாக மட்டுவில் சிவன் கோவில்வரை பாடசாலை வீதி அமைக்கப்படும்.

இவ் வேலைத்திட்டத்திற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ் வேலைத்திட்டம் மிக விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி முகாமையாளர் தி.பகீரதன் தெரிவித்தார். (க-37)

# மட்டக்களப்பில் கஞ்சா விற்ற 8 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுவரித்திணைக்கள அதிகாரிகளினால் நடத்திய திடீர் சுற்றிவளைப்பில் பெருமளவு கஞ்சா கைப்பற்றப்பட்டதோடு கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கறுதாவளைத கோத்தா தீவு, காத்தான்குடி, மாங்காடு, ஓட்டமாவடி, முறக்கட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நட்வடிக்கையின் போதே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள கிழக்கு மாகாண பொறுப்பதிகாதி தலைமையில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களும் பொறுப்பதிகாரிகளும் இந்த தேடுதல் சுற்றிவளைப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர். (க-9)

# ஹோட்டல்களை படம் எடுத்த மூவர் கைது!

(பெந்தோட்டை)

பெந்தோட்டை கடற்கரைப் பிரதேசத்திலுள்ள சுற்றுலாத்துறை ஹோட்டல்களை வீடியோ படம் எடுத்த யாழ்ப்பாணச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்றும் தற்போது வத்தளையில் வசித்து வருகின்றார் என்றும் பெந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய இருவரில் ஒருவர் பெண் என்றும் மற்றயவர் அமெரிக்க கலிபோனியா நகரில் வசித்துவருபவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-5)


அருள் மிகு சுன்னாகம் மயிலணி
கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



10 ஆம் நாள் 30.06.2006
(சப்பறத் திருவிழா)



அணிமயில் அகவு மயிலணி அம்மானே!

நேரில் திகழும் சேவற் கொடியாய்
தொண்ட னாகவணங் கமறந் தறியோம்
ஊரு ராக உலைந்தோ மலைந்தும்
உரிமை வாழ்வை உணரா தொழிந்தோம்


பாரோர் புகழப் பறக்கும் கோட்டை
பாற்றும் பரமர் பெற்ற பரனேயோ
ஆரே எமதின் னலகற் றவல்லார்
அணிமயில் அகவு மயிலணி அம்மானே!

சிவ சண்முக வடிவேல்

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 13

முருக-தனுஷ்கோடி



தேர்தல் அதிகாரி எனக்குச் சரியான பதில் கொடுக்க முடியாமல் திணறினார். அதற்குள் அந்த இடத்துக்குக் காமராஜ் வந்துவிட்டார். தலைவரிடம் நான் ஒன்றும் பேசவில்லை. தேர்தல் அதிகாரி மீனாட்சி சுந்தரம்பிள்ளையே என் ஆட்சேபத்தைத் தலைவரிடம் தெரிவித்தார்.

"இதற்கு ஒரு ஆட்சேபமா? உனக்கு வெட்கமாக இல்லையா? போய் உன் வேலையைப் பார்" என்று என்னைப் பார்த்துச் சீறினார் தலைவர். பின்னர், மீனாட்சி சுந்தரம்பிள்ளையைப் பார்த்து, "நீங்கள் ஒன்றும் இதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம்; மற்ற வேலைகளைப் பாருங்கள்" என்று கூறிவிட்டு, காமராஜ் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். எதிர்பார்த்தபடியே கொஞ்ச ஓட்டில் நான் தோற்றேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் 1940 ஆம் ஆண்டு மீண்டும் வந்தது. இந்தத் தேர்தலில் காமராஜை சத்தியமூர்த்தி நிறுத்திவைத்தார். கோவை சி.பி. சுப்பையாவை ராஜாஜி நிறுத்தி வைத்தார். பலத்த போட்டி! ஓட்டெடுப்பு நடந்தது. ஓட்டு எண்ணிக்கை முடியும் வரை யார் வெற்றி பெறுவார்கள் என்று சொல்ல முடியாதபடி அவ்வளவு நெருக்கமாகப் போட்டியிருந்தது. ஓட்டு எண்ணிக்கை முடிந்தது. காமராஜுக்கு 103 ஓட்டுக்களும், சுப்பையாவுக்கு 100 ஓட்டுக்களும் கிடைத்தன. நான் மட்டும் பிரதேச காங்கிரஸ் உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் தலைவரின் ஓட்டுக்கள் 104 ஆக ஆகியிருக்கும். அன்று காமராஜுக்கு அதிகமாகக் கிடைத்த ஓட்டுக்களால்... அந்த 3 ஓட்டுக்களால் தமிழ் நாட்டின் சரித்திரமே மாறத்தொடங்கியது. 1919 ஆம் ஆண்டு காங்கிரஸில் தொண்டராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியவர் 21 ஆண்டுகளில் அந்தக் காங்கிரஸின் தலைவராகவே ஆனார். காமராஜ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவருடைய வாழ்க்கை வரலாறுகளை தெரிந்துகொள்ள மக்கள் விரும்பினார்கள். தலைவரின் தியாகமும், எளிமையும் மக்களைக் கவர்ந்தன. காமராஜுக்கு உதவியாக இருக்க சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராகப் பதவி ஏற்றார்.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயம் சென்னைக் கவர்னர் ஆர்தர் ஹோப் யுத்தநிதி வசூல் செய்ததார். அந்நியனுக்கு யுத்தநிதி கொடாதீர்கள் என்று காமராஜ் தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து பிரச்சாரம் செய்தார். இதனால் யுத்தநிதி வசூல் தடைப்பட்டது. இதைக் கண்ட வெள்ளை அரசுக்குக் காமராஜ் மீது கடுங்கோபம்! காமராஜைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து வேலூர்ச் சிறைக்கு அனுப்பினார்கள். இது தலைவரின் மூன்றாவது சிறைவாசம் ஆகும்.

சத்தியாக்கிரகம் செய்ய வரும் புது நபர்கள் காந்திஜியின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். காந்திஜியின் அங்கீகாரத்துக்காக ஒரு பட்டியலைக் காமராஜ் கொண்டுபோகும் போது தான், கூடூர் ஸ்டேஷனில் ரெயிலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

காந்திஜி ஆரம்பித்த தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தில் நகர சபைத் தலைவர்கள் எல்லாரும் சட்டத்தை மீறி சிறை செல்ல வேண்டும். அதன்படி விருதுநகர் நகரசபைத் தலைவர் சங்கரபாண்டிய நாடார் சட்டத்தை மீறிச் சிறை சென்றார்.

## 6. விருதுநகர் சேர்மன்

*ஒருநாள் சேர்மன்! மறுநாள் ராஜிநாமா*

கைது செய்யப்படுவதற்கு முன், தமக்குப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக வேலூர் ஜனாப் உபயதுல்லா இருக்கவேண்டுமென்று காமராஜ் அறிக்கை விட்டார்.

விதுதுநகர் சேர்மன் சங்கரபாண்டிய நாடாரும் சிறை சென்று விட்டதால், சேர்மன் பதவி காலியாக இருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் உபயதுல்லா தேர்தல் சம்பந்தமாக விருதுநகர் வருவதாக எனக்குத் தபாலும் தந்தியும் அனுப்பியிருந்தார். சேர்மன் தேர்தலை நாங்களே சுமுகமாக முடித்துக் கொள்கிறோம் என்று அவருக்கு நான் பதில் எழுதினேன்.

அப்போது துணைத் தலைவராக (வைஸ் சேர்மன்) இருந்த ரா.குருசாமி, 1941ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி சேர்மன் தேர்தல் நடைபெறுமெனத் திகதி குறிப்பிட்டார். யார் சேர்மன்? யார் சேர்மன்? என்று ஊரெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார்கள். வேலூர் சிறையில் இருந்த காமராஜைச் சேர்மனாக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததும் எங்கள் ஆசை நிறைவேறியது.

அதற்கு முன்பு வங்கசிங்கம் தேசபந்து சித்தரஞ்சன் தாஸைச் சிறையில் இருக்கும்போது மேயராகத் தேர்ந்தெடுத்துக் கல்கத்தா மக்கள் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அதுபோல், நாங்களும் சிறையில் இருந்த காமராஜைச் சேர்மனாகத் தேர்ந்தெடுத்துப் பெருமைப்பட்டுக் கொண்டோம்.

தலைவர் சிறையில் இருந்தபடியால் ஆடம்பரமற்ற முறையில் கவுன்சிலை நடத்தி வந்தோம். காமராஜ் சேர்மனாக இருந்த காலத்தில், 'கோசன் சவுக்' என்ற இடத்தின் அருகே புதிய வாசகசாலை ஒன்று கட்டப்பட்டது.

எந்தவித ஆடம்பரமுமின்றி வாசகசாலை திறக்கப்பட்டது. விருதுநகர் முனிசிபல் சரித்திரத்திலேயே பெயர்க்கல் பதிக்கப்படாத முனிசிபல் கட்டடம் அது ஒன்றுதான்.

சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 9 மாதத்திற்குப் பின் 1942 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வாரத்தில் காமராஜ் விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது வாரத்தில் அவர் விருதுநகர் வந்தார். விருதுநகர் மக்களால் அவருக்கு மகத்தான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

மார்ச் மாதம் 16ஆம் திகதி 'வைஸ் சேர்மன்' தலைமையில் விருதுநகர் முனிசிபல் கவுன்சில் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. 90ஆவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுப் பதிவாகிக் கொண்டிருந்தது. திடீரென்று காமராஜ் சேர்மன் என்ற முறையில் கவுன்சில் கூட்டத்திற்கு வந்தார். எல்லாக் கவுன்சிலர்களும், முனிசிபல் ஊழியர்களும் எழுந்து நின்று மரியாதையுடன் வரவேற்றார்கள்.

சேர்மன் ஆசனத்தில் அமர்ந்தார் காமராஜ். 91ஆவது தீர்மானம் வாசிக்கப்பட்டது. பதிவு செய்துவிட்டு எழுந்தார். "என்னைச் சேர்மனாகத் தேர்தெடுத்தது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். எனக்குப் பல முக்கிய வேலைகள் இருக்கின்றன. ஆகவே என்னால் சேர்மன் வேலை பார்க்க இயலாது. நான் சேர்மன் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறேன்" என்று சொல்லி, ராஜினாமா கடிதத்தை வைஸ் சேர்மனிடம் கொடுத்து விடைபெற்று இறங்கிச் சென்றார். கட்சி வேலைக்காகப் பதவியைத் தூக்கியெறிந்து சென்றுகொண்டிருந்தார் அவர். இப்படி ஒரு தியாகியை விருதுநகர் பெற்றெடுத்ததற்குப் பெருமைப்பட்டோம்.

9மாதம் சேர்மனாக இருந்து (சிறையில் இருந்தவாறு) 9நிமிடம் கவுன்சிலை நடத்திய தலைவர் காமராஜ் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் இவை தாம்.

"ஒருபதவி, அது கௌரவப் பதவியாக இருந்தாலும் சரி, அந்தப் பதவியை வகிப்பவர்கள் சரியாகக் கவனித்துச் செயலாற்ற வேண்டும். அது முடியாதவர்கள் அல்லது அதற்குத் தோது இல்லாதவர்கள் அப்பதவிக்கு வரவே கூடாது".

(தொடரும்)

# 'மாணிக்கவாசகர்' குருபூசை விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினரின் அனுசரணையுடன் நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தில் நடைபெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் சு.உதயபாலன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ரி. ஜெயசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் தியாகராசா ம.ம. வித்தியாலய பதில் அதிபர் கா.குமாரவேலுவும், யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந. பரமசிவமும், காரைநகர் ஊர்காவற்றுறை கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை தியாகராசா ம.ம.வித்தியாலய முன்னாள் அதிபர் சு.வேலாயுதபிள்ளையும், வாழ்த்துரையை வே.குமாரசாமியும், ஆசியுரையை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்களும் வழங்குவார்கள்.

சிறப்புச் சொற்பொழிவை யாழ். மாவட்ட முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசுவும், சமுர்த்தி உத்தியோகத்தர் சி. கங்காதரனும் மேற்படி அன்னதான சபையின் பொருளாளர் கே.சிவபாலனும் நிகழ்த்தவுள்ளனர். அதனைத்தொடர்ந்து காரை நகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு இடம் பெறும். (க-246)

## தேர்த் திருவிழா

(கற்கோவளம்)

பருத்தித்துறை பசுபதீஸ்வர ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (க-104)

## திருவாசக முற்றோதல்

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (க-7)

## மாலை 5மணிவரை படகுச்சேவை!

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மாலை 5 மணி வரை படகுச்சேவை இடம்பெறும் என நயினாதீவுப் படகுச் சேவைச் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (க-132)

## தந்தித்தூதுவர் நியமனம்!

கைதடி தபாலகத்திற்கு கடந்த 20 வருடகாலத்திற்குப் பின் தற்போது தந்தித் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி தபாலகத்தால் தெரிவு செய்யப்பட்ட 6 பேரில் ஒருவருக்கே முன்னுரிமை அடிப்படையில் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (க-21)

## பொங்கல் விழா

தென்மராட்சியின் தெற்குப் பிரதேசத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மறவன்புலோ மத்தி நித்தர்புலம் செல்வமுத்து மாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரப் பொங்கல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (க-37)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2006/2007 ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் 2005/2006க்கான தலைவர் லயன் எஸ். சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தின் போது 306பி1ன் மாவட்ட உப ஆளுநர் லயன் எஸ். ராகவன் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்கின்றனர்.

இவ் வைபவத்தின் போது கழகத்தினால் சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் கணவன்மார்களை இழந்த பத்துப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்படுவதுடன் கல்வித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களுக்கான நிதியுதவியும் வழங்கப்படும்.

இவ் வைபத்தில் 2006/ 2007 ஆண்டுக்கான புதிய தலைவராக லயன் வடிவேல் ஸ்ரீ பிரகாஸ் உப ஆளுநரால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்படுவார். (க-16)

# தொழில்களை மேம்படுத்தும் செயல் திட்டம் அமுலுக்கு

கொழும்பில் உள்ள மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் நிதியுதவியுடன் அறவழிப் போராட்டக்குழு தென்மராட்சியில் 24 சிறு தொழில் முயற்சியாளர்களின் தொழில்களை மேம்படுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் மரக்கறி வியாபாரம், சிறு வியாபாரம் வெண்மைத் தொழில், சைக்கிள் திருத்துதல், பலகார உற்பத்தி, ஆடுவளர்ப்பு மற்றும் மாடுவளர்ப்பு போன்ற தொழில் முயற்சிகளில் ஈடுபடும் குடும்பங்களுக்கு தலா 8 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதன் முதல்கட்டமாக ஒவ்வொரு முயற்சியாளருக்கும் தலா நாலாயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் மீதித் தொகை இரு கட்டங்களாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-16)

# போதைப் பாக்கு விற்றவருக்கு 10000 ரூபா அபராதம் விதிப்பு

போதைப் பொருள் அடங்கிய பான்பராக் பாபுல் எனப்படும் பாக்குத்தூள் பக்கெட்டுகள் 320ஐ வைத்திருந்த குற்றத்தை ஏற்றுக் கொண்ட வர்த்தகர் ஒருவருக்கு குருநாகல் மஜிஸ்திரேட் ஏக்கநாயக்க 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

குருநாகல், நீர்கொழும்பு வீதியில் வர்த்தகம் செய்து வரும் சோமசுந்தரம் சண்முகநாதன் என்பவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நகரிலிலுள்ள பிரபல பாடசாலையின் முன்னால் உள்ள மேற்படி வர்த்தக நிலையத்தில் மாணவர்கள் பாக்குத்தூள் பக்கெட்டுகளை விலைக்கு வங்குவதாகக் கிடைத்த தகவலையடுத்தே இத் தேடுதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். குருநாகல் தலைமையக பொலிஸாரே விசாரணைகளை மேற் கொண்டு வழக்குத் தொடுத்தனர். (க-7)

கணவனுடன் சேர்த்து வைக்க நள்ளிரவு பூஜை

# சுடுகாட்டில் தாலியை "சுட்ட" பூசாரி கைது

பொள்ளாச்சி அருகேயுள்ள அங்காலக் குறிச்சி ஜேஜே நகரைச் சேர்ந்தவர் மேரி இவரது கணவர் பாலசுப்பிரமணியம் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். கணவனுடன் சேர்ந்து வாழ மேரி விரும்பினார்.

சுந்தரகவுண்டனூரைச் சேர்ந்தவர் கனகராஜ் என்கின்ற கனகசபாபதி இவர் அங்குள்ள கோயிலில் பூசாரியாகவுள்ளார். அந்த கோயிலுக்குச் சென்ற மேரி, தனது குடும்பப் பிரச்சினையை கனகராஜிடம் தெரிவித்துள்ளார்.

உனக்கு தாலி தோஷம் உள்ளது சுடுகாட்டில் பூஜை நடத்தினால் தோஷம் நீங்கும். கணவருடன் சேர்வாய் என்று கனகராஜ் கூறியுள்ளார். இதை நம்பிய மேரி, அவருடன் நள்ளிரவில் சுடுகாட்டிற்குச் சென்றார்.

அங்கு பூஜையை ஆரம்பித்த கனகராஜ் மேரியின் தாலியை கழற்றி வைக்கச் சொல்லியுள்ளார். பூஜை முடியும்வரை கண்ணைத் திறக்காதே என்று தெரிவித்துள்ளார்.

அதன்படி செயல்பட்ட மேரி நீண்ட நேரம் கழித்து கண்ணைத் திறந்து பார்த்துள்ளார். கனகராஜையும், அங்கு கழற்றி வைத்த மூன்றரை பவுண் தங்கத்தாலியையும் காணாமல் அதிர்ச்சியடைந்தார். சுடுகாட்டில் தனியாக மாட்டிக் கொண்ட மேரி, பயத்துடன் வீடுதிரும்பினார். தன்னை கனகராஜ் ஏமாற்றியதை அறிந்த மேரி கோட்டூர் பொலிசில் புகார் தெரிவித்தார். பொலிஸார் கனகராஜைத் தேடிப்பிடித்து கைதுசெய்தனர். (தி)



லண்டன் பக்கிங்காம் அரண்மனையில் நடந்த பிறந்த நாள் விழாவில் எழுத்தாளர் ரோவ்லிங், பாப் திபில்டர் உள்ளிட்டோரை பிரிட்டிஸ் ராணி எலிசபெத் சந்தித்துப் பேசியபோது...

உலக தரிசனம்

# இஸ்ரேல் இராணுவத்தினரால் பாலஸ்தீன அமைச்சர் கைது

பாலஸ்தீன பகுதிகளில் தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேலிய படையினர் ஹமாஸ் தலைமையிலான பாலஸ்தீன அமைச்சர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக பாலஸ்தீன பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள் ளனர்.

இஸ்ரேல் பகுதியிலிருந்த படைச் சிப்பாய் ஒருவரை பாலஸ்தீனப் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். அந்தச் சிப்பாயை விடுவிக்குமாறு இஸ்ரேல் கோரியிருந் தது. எனினும் அவர் விடுவிக்கப்படாததன் காரணமாக இஸ்ரேல் பாலஸ்தீனப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல்களை நடத்திவருகிறது.

இந்த நிலையில் ரமலா நகருக்கு வடக்கேயுள்ள தனது சொந்த ஊருக்குச் சென்று கொண்டிருந்த பாலஸ்தீன தொழில் அமைச்சர் மொகமட் பார்கோடி என்பவரை வழிமறிந்த இஸ்ரேலிய படையினர் அவரை பலவந்தமாக அழைத்துச் சென்றுள்ளதாக பாலஸ்தீன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பல பாலஸ்தீன அமைச்சர்களை பாலஸ்தீன படையினர் தேடிவருவதாக வும் அவர் தெரிவித்துள்ளார். (தி)

# கள்ளக்காதல் ஜோடி தூக்கில் தொங்கியது

(திருச்செங்கோடு)

வீட்டாருக்குத்தம் விடயம் தெரிந்து போனதால் அவமானமடைந்த கள்ளக்காதல் ஜோடி திருச்செங்கோட்டு மலையில் தூக்கில் தொங்கி தற்தொலை செய்துகொண்டனர்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சூரியம்பாளையத்தைச் சேர்ந்த முனியப்பனின் மனைவி தெய்வானை இவர்களுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். முனியப்பனின் தறிக்கூடத்தில் வேலைசெய்து வந்தவர் சவுந்திரம் இவருக்கு மேகலா என்ற மனைவியும், ஒரு மகனும், ஒருமகளும் உள்ளனர்.

தறி ஓட்டவந்த சவுந்திரத்துக்கும், தெய்வானைக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பழக்கம் 'கள்ளக்காதலாக' மாறியது. இது வீட்டுக்குத் தெரிந்ததால் சவுந்திரம் வேலையைவிட்டு நின்றுவிட்டார்.

இதனிடையே கடந்த 19ஆம் திகதியிலிருந்து இருவரையும் காணவில்லை. இந்நிலையில் திருச்செங்கோடு மலையில் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு செல்லும் வழியில் இருவரும் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். இது குறித்து திருச்செங்கோடு பொலிஸாருக்குத் தகவல் தரப்பட்டது. மனைவி பிணத்தைக் கணவரும் கணவர் பிணத்தை மனைவியும் அடையாளம் காட்டினர்.

இதையடுத்து சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக திருச்செங்கோடு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை முடிந்து கணவன் சடலத்தை மனைவியும், மனைவியின் சடலத்தைக் கணவரும் பெற்றுச் சென்றனர். கள்ளக்காதல் வெளியே தெரிந்ததாலேயே இருவரும் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. திருச்செங்கோடு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (தி)

# இந்திய திரைப்படங்களுக்கு பாக்.இல் தடை நீடிப்பு!

(இஸ்லாமபாத்)

இந்தியத் திரைப்படங்களைத் திரையிடக்கூடாது என்ற தடை நீடிப்பதாக பாகிஸ்தான் கலாசாரத்துறை அமைச்சர் ஜி.ஜி. ஜமால் தெரிவிக்கிறார். இஸ்லாமாபாத்தில் இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவித்தபோது,

இந்தியத் திரைப்படங்களுக்கு தடை விதிக்கக் காரணமாக இருந்த அம்சங்கள் அப்படியே நீடிக்கின்றன. எனவே தடையை நீக்கப் போவதில்லை இரு நாடுகளையும் சேர்ந்த நடிகர்கள். நடித்த அயல்நாட்டுத் திரைப்படங்களைத் திரையிட தடைஇல்லை.

ஜூலை மாத இறுதியில் பாகிஸ்தானியத் திரைப்படங்களின் திருவிழா இந்தியாவில் நடைபெறும். அதற்காக 6 திரைப் படங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் தேசிய திரைப்பட அகடமி ஏற்படுத்தப்படும் அதற்கு தனியார் துறையினரின் உதவியும் நாடப்படும்.

பாகிஸ்தானில் திரைப்படத்துறை நலிவடைந்து வருகிறது. நாடு முழுக்க முன்னர் 1,500 திரையரங்குகள் இருந்தன. இப்போது அவற்றின் எண்ணிக்கை 211 ஆகக்குறைந்துவிட்டது என்றார். (தி)

# சதாமுக்கு எதிராக புதிய வழக்கு

(பக்தாத்)

குர்தஷ்களை படுகொலை செய்தமை தொடர்பாக ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீது புதிய வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. சதாமும் அவரது இராணுவ தளபதிகளும் இந்த வழக்கில் விசாரிக்கப்படுவார்கள்.

1988இல் துருக்கியின் எல்லையுடன் ஒட்டியிருக்கும் குர்திஷ்தான் பிராந்தியத்தில் குர்திஷ் இனத்தவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை சதாம் மேற்கொண்டார். 7 மாத காலமாக இடம்பெற்ற இந் நடவடிக்கையில் 4500 கிராமங்கள் அழிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான குர்திஷ் இனத்தவர்கள் கொல்லப்பட்டனர் பலர் காணாமல் போயுள்ளனர்.

சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்ட குர்திஷ்களின் சடலங்கள் பாரிய புதைகுழிகளில் போடப்பட்டன. இரு புதைகுழிகளிலிருந்து 123 சடலங்களை இவ்வாரம் தோண்டி எடுத்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. இதில் 88 சடலங்கள் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளது சடலங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அனைவரும் தலையின் பின்புறமாக சுடப்பட்டுள்ளனர்.

சதாம் உசேன் மற்றும் அவரது மைத்துனரான கெமிக்கல் அலி என அழைக்கப்படும் அலிவரஸன் அல்மாஜித் உட்பட 7 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தலைமை வழக்குத் தொடுனர் ஜாபர் அல் மூஸாவி கூறினார்.

யுத்த குற்றங்கள் புரிந்ததாகவும் மனித இனத்துக்கு எதிராக குற்றங்கள் புரிந்தாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சதாம் மற்றும் கெமிக்கல் அலி மீது இனப்படுகொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சதாமுக்கும் ஏனைய குற்றவாளி களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டால் அது நமக்கு ஆறுதல் அளிக்குமென உறவினர்களைப் பறி கொடுத்த குர்திஷ் இனத்தவர் ஒருவர் கூறினார். 1980ஆம் ஆண்டு துஜைல் நகரில் 148 ஷீஆக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர் பாக சதாம் மீது இப்போது வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கிலும் சதாம் மரண தண்டனையை எதிர் நோக்கியுள்ளார். (த-9)

# அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு 16பேர் பலி;2இலட்சம் பேர் இடம்பெயர்வு

அமெரிக்காவின் வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 16பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதி நகரான பென்சில்வேனியாவில் சுமார் 2 இலட்சம் பேர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இப் பகுதியில் உள்ள சஸ்குவென்னா ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் இப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ள் நீர் மட்டம் உயர்வடைந்து வருகிறது.

இதன்காரணமாக நியூயோர்க், நியூ ஜெசி, பென்சில்வேனியா ஆகிய இடங் களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு மேலும் அதிகரிக்கலாமென அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 40,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வெள்ளம் பரவலாம் என்று அமெரிக்க வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (தி)

# சார்லிசாப்ளின் பயன்படுத்திய தொப்பி.கைத்தடி ஏலத்தில் விற்பனை

(லொஸ் ஏஞ்சலீஸ்)

சர்வதேச அளவில் நகைச்சுவைக்குப் பெயர்போன சார்லி சாப்ளின் பயன்படுத்திய தொப்பியும் கைத்தடியும் ரூ.63லட்சத்துக்கு ஏலம் போனது. இத்தகவலை பொனாம்ஸ் அண்ட் பட்டர்ஃபீல்ஸ் ஏல நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஜேனேல் கிரிக்ஸ்பி தெரிவித்தார்.

இரு பொருள்களையும் வாங்கியது யார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. தொப்பியின் உட்புறத்தில் அதன் தயாரிப்பாளாரின் பெயர் முகவரி முத்திரையிட்ப் பட்டுள்ளது.

சார்லி சாப்ளினின் கைத்தடி மூங்கிலால் செய்யப்பட்டிருந்தது. அதன் உயரம் 32 அங்குலங்கள். இந்த ஏலத்தில் அமெரிக்க முன்னாள் பிரதமர் பில்கிளிண்டன் பயன்படுத்திய சாக்ஸாபோன் மற்றும் பல பிரபலங்களின் பொருள்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. (தி)

## மெக்சிக்கோவில் தேர்தல் பிரசாரங்கள் முடிவு

மெக்சிகோவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

அனைத்து தேர்தல் பிரசாரங்களுக்கான கூட்டங்களும் நேற்றுடன் முடிவடைந்துவிட்டன.

இதேவேளை, தேர்தல் பிரசாரங்களின் போது வேட்பாளர்கள் அரசியல் ரீதியாக ஒருவரையொருவர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இடதுசாரி வேட்பாளரான மனுவில் லூப்ஸ் ஒப்ராடோ மற்றும் கன்ஸவேட்டிவ் வேட்பாளரான பிலிப்ஸ் காடிலோனுக்கு மிடையில் கடும் போட்டி நிலவுகிறது. (தி)

சத்தியம் யாருக்கும் எக்காலத்திலும் துன்பம் தந்த தில்லை. தவறாகவும் அறியாமையுடனும் வாழ்பவன் தான் உண்மையில் கஷ்டப்படுவான்.

-ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## பொதுத்தேர்தலை நடத்தினால் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகிட்டுமா?

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தவேண்டுமென்பது அரசியல்வாதிகளின் சிலரின் கருத்து.

இதைப்பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

பிரச்சினை ஏதோவாக இருக்க அணுகுமுறை இன்னொன்றாக இருப்பது இலங்கை அரசியலில் நீண்டகாலமாக நீடிக்கும் சாபக்கேடு.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்டிருக்க வில்லை.

எனினும் ஜனாதிபதித்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெற்றியீட்டியதால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவது அவ்வளவு நல்லதல்ல என ஐக்கிய தேசியக்கட்சி கருதியது.

வெற்றியோடு வெற்றியை ஈட்டிக்கொள்ளும் விருப்பம் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இருந்தாலும்,

பாராளுமன்றத்தைக் கலைப்பது,நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் தலையிடியைக் கொடுக்கும் என்பதாலும் ஜே.வி.பிக்கு பாராளுமன்ற ஆசனத்தை மேலும் அதிகரிக்கும் என்பதாலும்,ஜனாதிபதி மகிந்த அதனை விரும்பவில்லை.

இவ்விதம் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக்கட்சியும் விரும்பாத காரணத்தால் பலம் குறைந்த நிலையிலும் பாராளுமன்றம் உயிர்ப்போடுள்ளது.

இடையில் நடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிற்கு மிகப்பெரும் சாதகமாக அமைந்த அதேநேரம் ஜே.வி.பிக்கு மிகப்பெரும் படுதோல்வியாகவும் இருந்தது.

ஆகா! இதுவல்லவோ நல்ல சந்தர்ப்பம் ,பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தினால் அதிக பெரும்பான்மையுடன் தனது கட்சி வெற்றியீட்டுமென ஜனாதிபதி மகிந்த ஊகித்துக்கொண்டதும் உண்டு.

ஆயினும் துரதிஷ்டவசமாக உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் நாட்டின் பொதுத்தேர்தல் நடத்துவதற்கேற்ற சூழ்நிலை அமையவில்லை.

யுத்த நிறுத்த உடன்படிக்கை வலுவிழந்து போனது. ஆங்காங்கே குண்டு வீச்சுக்கள், துப்பாக்கி வேட்டுக்கள்.

முப்படைகளையும் உஷாராக வைத்திருக்க வேண்டியதாயிற்று. இதனால் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் கிடைத்த வெற்றிவாய்ப்பை பொதுத்தேர்தலுக்கும் திசைதிருப்பிவிடும் மகிந்தவின் சிந்தனை சிதறிப்போயிற்று.

இந்நிலையில் தென்னிலங்கையில் தற்கொலைத் தாக்குதல் மற்றும் கிளைமோர்த்தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் சமாதான சூழ்நிலை குழப்பமடைந்து விட்டதை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி போன்ற எதிர்க்கட்சிகளுக்கு போதிய ஆதாரம் கிடைத்துவிட்டது.

எனவே இது தமக்குச் சாதகமானது என்ற நினைப்பில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தப்போவது உறுதி.

தற்போது நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதே உத்தமமானது என ஐக்கிய தேசியக்கட்சி கூறிக்கொள்ளும்.

இது தனது வெற்றியின் இலக்கை மையமாக் கொண்டதேயன்றி ,இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கானதல்ல என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

# குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும்

## சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

தாய், சேய் மரண வீதத்தை குறைக்கவும் சாதாரண மக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் சுகாதார வசதிகள் சென்றடைவதற்குமே குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றதாக சுகாதார மற்றும் போஷாக்கு பராமரிப்புத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

பதுளை மாவட்டத்தில் 122 குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் வைபவம் பதுளை பொது வைத்தியசாலை முன்றலில் இடம்பெற்றது.

இவ் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச் சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா , எதிர்காலத்தில் நாடு பூராகவும் உள்ள சகல சுகாதார குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள் கள் வழங்கப்படும் .

அதற்காக 2ஆயிரத்து 500 மோட்டார் சைக்கிள்களை இலங்கைக்கு கொண்டுவர விலை மனுக்கோரப்பட்டுள்ளது. இவைகளை விரைவாக இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அத்தோடு குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு சிறந்த மனவெழுச்சி வளர்க்க வேண்டிய பயிற்சிகளும் எச்.ஐ. வி. எயிட்ஸ் தொடர்பான பயிற்சி நெறிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்துவது கஷ்டப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையினை பெற்றுக்கொடுப்பதற்கேயாகும் என்றார். (சு-7)

## இளம் குடும்பஸ்தர் ஒருவரை காணவில்லையென முறையீடு

(யாழ்ப்பாணம்)

அல்லாரை தெற்கு மீசாலையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கணேசமூர்த்தி ஜெகரூபன் (வயது-23) என்ற நபரே இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை என முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இந் நபர் புத்தூர் சந்தி மீசாலையில் திருமணம் முடித்து வசித்து வந்ததாகவும் அவரை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.00மணியளவில் வீட்டு வாசலில் வைத்து இராணுவத்தினர் கைதுசெய்ததாகவும் இதுவரை அவரை விடுவிக்கவில்லை என்றும் அவரது தாயாரால் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு-133)

## விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் இன்று என அறிவிப்பு!

(கொழும்பு)

அடுத்த வருடம் தரம்-1 க்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் இன்றாகும்.

பாடசாலைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்துப் பெற்றோர்களும் குறிப்பிட்ட பாடசாலை அதிபரினால் இன்று விசேட கூட்டமொன்றுக்கு அழைக்கப்படுவார்கள்.

இருவாரத்தில் அனைத்து விண்ணப்பப்படிவங்களும் ஆவணப்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஒவ்வொரு விண்ணப்பதா ரிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

விண்ணப்பித்தவர்களின் சார்பில் எவரும் பாடசாலையின் பழைய மாணவராக இருப்பின் அது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இதற்கு அதிபர்களுக்கு முழு அதிகாரமும் உண்டு. புள்ளி வழங்கும் செயற்பாட்டின் பின்னர் அனைத்து விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் பாடசாலையின் விளம்பரப் பலகையில் வெளியிடப்படும்.

பின்னர் இரண்டு வாரங்களுக்குள் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்து பெற்றோர்கள் முறையிட முடியும். (சு-9)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

டெனிஸ் கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 5 பிரதேசங்களில் கண்ணி வெடியகற்றப்பட்டு அவை மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக திட்டமிடல் நடவடிக்கை அதிகாரி செ. டெனி சனிடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் கிழக்கு ஜே/122 கிராம சேவகர் பிரிவில் 5 ஆயிரத்து 382 சதுர மீற்றர் பிரதேசத்திலும் ஏனைய நான்கு பகுதியில் 8 ஆயிரத்து 724 சதுரமீற்றர் பிரதேசத்திலும் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இவை தவிர தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி வடக்கு பன்னாலை ஜே/216 கிராம சேவகர் பிரிவில் 9 ஆயிரத்து 533 சதுரமீற்றர் பிரதேசத்தில் 90 மிதிவெடிகளும் 3 செல்களும் மீட்கப்பட்டன.

ஏனைய 6 ஆயிரத்து 662 சதுர மீற்றர் பிரதேசத்தில் 143 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதேவேளை உடுவில் பிரதேச செயலர் பிரிவில் குப்பிளான் தெற்கில் 921 சதுரமீற்றர் பிரதேசத்திலிருந்து மிதிவெடியொன்றும் வெடிக்காத செல் ஒன்றும் மீட்கப்பட்டன. (சு-133)

## 'ஹிந்தி' கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்!

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள மத்திய ஹிந்தி கற்கை நிறுவனத்தில் ஹிந்தி கற்பதற்கு இலங்கை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

க.பொ.த.சாதாரணதரம் அல்லது உயர்தரத்தில் ஹிந்தியை ஒரு பாடமாக கற்ற மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் ஹிந்தி மொழி கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் ஆகஸ்ட் முதலாம் திகதி 2006இல் 21தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட இலங்கையர்களும் இப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விமானக் கட்டணம், கற்கை நெறிச்செலவு, தங்குமிட வசதி உட்பட பல வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களையும் இது தொடர்பான மேலதிக விபரங்களையும் பெற விரும்புபவர்கள் இல 36 -38 ,காலி வீதி ,கொழும்பு 03 இல் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் தகவல் பிரிவுடன் வார நாட்களில் மாலை 2. 30 மணி தொடக்கம் 4.30 மணிவரை தொடர்பு கொள்ளுமாறு அல்லது 2446892 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வாளரின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் . பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கப்பட வேண்டிய கடைசித் தினம் ஜுலை 5ஆம் திகதி ஆகும். (சு-7,9)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து 4 ஆவது கட்டமாக ஏற் றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி எதிர்வரும் 4ஆம் திகதி யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட இந்து விடுதியில் முற்பகல் 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.00மணிவரையும், ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் மதியம் 12.00மணிவரையும், வண்ணார்பண்ணை ஆத்திசூடி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரையும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்தேற்றப்படும்.

எதிர்வரும் 5ஆம் திகதி அரசடி வீதியிலுள்ள ஞானக் குழந்தை பாலர் பாடசாலையில் 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.00மணிவரையும், கொட்டடி மீனாட்சி அம்மன் கோவிலடி கிராமத்தில் 10.30 மணி தொடக்கம் 12.00 மணி வரையும், ஆஸ்பத்திரி வீதி அடைக்கல அன்னை தேவாலயத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும்.

எதிர்வரும் 7ஆம் திகதி மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் முற்பகல் 8.30 மணிதொடக்கம் முற்பகல் 10.00மணிவரையும், கொழும்புத்துறை சென்மேரி தேவாலயத்தில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரையும், வவன்புர சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00மணிவரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. (சு-9)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உங்களுடைய திறமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தால் உங்களுடைய பெயர் உலகப் புகழ்பெற்ற பெயராக உருவெடுக்கும்.

சுவாமி விவேகானந்தர்

# நெல்லியடி பொதுச்சந்தை திடீரெனச் சுற்றிவளைப்பு

## வீடு செல்லமுடியாது குடும்பப் பெண்கள் தவிப்பு

(துன்னாலை)

நெல்லியடிப் பொதுச் சந்தை நேற்றுக் காலை 10 மணியளவில் திடீரென இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுக் கொண்டவர்கள் பி.ப2.30 மணிவரை தடுத்து வைக்கப்பட்டனர். சந்தையில் மீன்வாங்கியவர்கள் சுற்றிவளைப்பு முடிபடைந்தபோது அது பழுதடைந்ததால் அவற்றைத் தூக்கி வீசிவிட்டுச் சென்றதைக் காணக்கூடியதாகவிருந்தது.

சந்தையில் நின்ற அனைவரினதும் அடையாள அட்டைகள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் அருகிலிருந்த இராணுவ முகாமிற்கு ஒவ்வொருவராகக் கொண்டு செல்லப்பட்டு தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர்.

இதேவேளை சந்தைக்குச் சென்றவர்களை காணாது பதறிய உறவினர்கள் சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் பிற்பகல் 2.30 மணிவரைக் காத்துக் கிடந்தனர்.

இதேவேளை சந்தைக்குச் சென்ற குடும்பப் பெண்கள் சிலர் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுக் கொண்டதால் அக் குடும்பத்தினர் மதிய உணவின்றி பட்டினி கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ச-101)

# அரச பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் புலிகளிடம் வேதனம் பெறுகின்றனர்

## சிங்கள நாளிதழ் தகவல்

நாட்டின் பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் சில அதிகாரிகள் புலிகள் இயக்கத்துடன் வேதனம் பெற்றுவருவதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெலிஓயா-கலியாணபுர முன்னணி காவலரணின் படைவீரர் ஒருவர் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்தே மேற்படி தகவல் வெளியாகியுள்ளது என்றும் இந்த நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நாளிதழில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி படைவீரரிடம் அதிநவீன செய்மதி கைத்தொலைபேசி இருந்ததைக் கண்டு சந்தேகம் உற்ற படைவீரர்கள் தமது உயர் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்து விசாரணை மேற்கொண்டபோது அக்கைத்தொலைபேசி புலிகள் இயக்கத்தினால் கையளிக்கப்பட்ட விடயம் அம்பலமாகியுள்ளது.

திருகோணமலை கோமரங் கடவெலவில் வசிக்கும் மேற்படி படைவீரர் தமிழ்ப் பெண் ஒருவரையே மணம் முடித்துள்ளார். அப் பெண்ணின் உறவினர்கள் புலிகள் இயக்கத்தின் உயர்தரத்தில் உள்ளவர்கள்.

மேற்படி படைவீரருக்கு அவ்வுறவினர்களே கைத்தொலைபேசியைக் கொடுத்துள்ளனர்.

மேற்படி படைவீரர் கைதானதையடுத்துப் புலிகள் இயக்கத்திடம் வேதனம் பெற்றுவரும் பல படை அதிகாரிகள் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளது.

மேற்படி படைவீரரை குற்றப்பிரிவு விசாரணைத்திணைக்களம் விசாரணை செய்து வருவதுடன் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடை படையினர் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பிரதேச செயலக ஊழியர் அடித்துப் படுகொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் பிரதேச செயலக ஊழியர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த பிரதேச செயலக ஊழியரான செல்லையா வர்ணகுலசிங்கம்(வயது-55) என்பவரே அடித்துப் படுகொலை செய்யப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் மாலை இராணுவத்தின் கட்டைபறிச்சான் சோதனைச் சாவடியூடாக பயணித்தபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அடித்துப் படுகொலை செய்யப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து விடுதலை புலிகள் நிர்வாகப் பகுதிகளிலும் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தமது போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் அச்சம் அடைந்துள்ளனர். (ச-5)

# புலிகள் தமது கோரிக்கையை...

டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தமது முழு நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கும் அவை நடைமுறைப்படுத்தும் கண்காணிப்புப் பணிகளிலும் தொடர்ந்தும்பங்கேற்க அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவற்றைத் தவிர எதிர்காலத்தில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இருக்கக் கூடிய பல்வேறு சாத்தியக்கூறு குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் பௌயர் தெரிவித்தார்.

இந்த முடிபுகள் குறித்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் தமது நாடுகளுக்குத்தெரியப்படுத்துவார்கள் எனவும் அதன் பின்னர் அந்த நாடுகளின் பதிலை நோர்வேக்குத் தெரிவிப்பார்கள் எனவும் ஜோன் ஹான்சன் பௌயர் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று எடுக்கப்பட்ட முடிபுகள் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவில் மாற்றம் செய்வது குறித்து இக் கூட்டத்தில் எதுவித மான முடிபும்எடுக்கப்படவில்லை எனவும் முன்பிருந்தது போலவே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்து இயங்கும் எனவும்கூறினார்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்கள்தற்போதைய சூழல் குறித்து தமது நாடுகளுடன் விவாதித்து தீர்மானம் எடுப்பார்கள்.

அதில் பாதுகாப்பு இல்லைஎனக் கருதினால் அந்த நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் திரும்பப்பெறப்படலாம் எனவும் பௌயர் குறிப்பிட்டார்.

இதேவேளை போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் எதுவும்செய்யப்பட வேண்டுமானால் இலங்கை அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மாற்றம் செய்யப்படும் எனவும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# துணைச்செயலாளர் பதவியிலிருந்து தயா சந்தகிரி இடைநிறுத்தம்!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் துணைச் செயலாளர் அட்மிரல் தயா சந்தகிரியை உடனடியாகப் பதவிலிருந்து இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்புவழங்கியுள்ளது.

அட்மிரல் தயா சந்தகிரிக்கு எதிராகத் தொடரப்பட்ட அடிப்படை உரிமைமீறல் தொடர்பான மனு மீதான விசாரணைக்கு அனுமதிவழங்கிய பிரதம நீதியரசர் சரத் என். சில்வா ஆயுதக் கொள்வனவு மோசடியில் குற்றஞ்சுமத்தப்பட்ட ஒருவருக்கு நியமனம் வழங்கியது சட்டத்திற்கு முற்றிலும் முரணான செயல் என தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இல்லாது துணை செயலாளர் பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் சட்டத்திலோ அல்லது அரசியல்அமைப்பிலோ அரசாங்கத்திற்கு வழங்கப்படவில்லை என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(05)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

### காலிறுதி ஆட்டம்

| அணி | இலங்கை நேரம் |
|---|---|
| ஜேர்மனி-ஆர்ஜென்டினா | 8.30இரவு |
| இத்தாலி-உக்ரைன் | 12.30இரவு |

# விரிவுரைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் 2005/2006 ஆம் ஆண்டின் கலைப் பீட புதுமுக மாணவர்களின் அறிமுக நிகழ்வும் சிரேஷ்ட மாணவர்களின் விரிவுரைகளும் மறு அறிவித்தல்வரை ஒத்திவக்கப்பட்டுள்ளதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச-9)

# மக்களுக்கு...

களும் சித்திரவதைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பல தசாப்தங்களாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் தங்களது இடங்களுக்குத் திரும்ப முடியாத வகையில் இராணுவச் செயற்பாடுகள் பாரிய முட்டுக்கட்டையாகவிருந்து வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இதர ஆயுதக் குழுக்களுக்குமிடையே மோதல் கடந்த ஆறு மாத காலம் தொடர்ச்சியாக நடந்து வருகின்றது.

இந்த ஆண்டு மட்டும் 700க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

படுகொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் காணாமல் போவதற்கும் பொதுமக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சிறார்கள் படையணிகளில் சேர்க்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# தமிழ் மக்களின் கோரிக்கைகள்...

மேலும் சீர்குலைத்து மற்றொரு இரத்தக் களறிக்கு இட்டுச் செல்லக் கூடும்.

உலக நாடுகளுக்கு அப்பால் ஐக்கிய நாடுகளின் பொதுச் செய லாளர் கொபி அனான் இரு தரப் பாரையும் நோர்வேயின் அனுசர ணையின் கீழ் அமைதிப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என்று கேட் டுக் கொண்டுள்ளார்.

'நல்ல சூழ்நிலைகளிலும் மோச மான சூழ்நிலைகளிலும் இலங் கை விடயத்தில் நோர்வே உறுதி யாகவிருந்துள்ளது' என்று நோர்வே அரசாங்கத்தின் சிறப்புத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்ப் புலிகளின் தலைவர்கள் மீண்டும் போரைத் தொடங்காதவாறு தடுத்து பேச்சுக் கள் மூலம் தீர்வு காண்பதில் குறிப்பிட்ட அளவிற்கு சர்வதேச அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவினர் செயற்பட முடியும்.

பழையனவற்றை மறந்து அமைதியை உருவாக்குவதற்காக இருதரப்பினரும் சமரசங்களை ஒப் புக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது என போஸ்டன் குளோப் தெரிவித்துள்ளது.

சிங்கள பெரும்பான்மையினத்தவரின் ஒடுக்குமுறையால் தமிழ் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு நியாயபூர்வமான முறை மைகளைக் கொண்டுள்ளனர்.

பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள், படுகொலைகளால் அரச அதிகாரிகள் பல சிங்களவர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய தாக்குதல்களினால் அது பயங்கரவாத வன்முறையாக் கப்பட்டு இலங்கையின் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு இழைக் கப்பட்ட அநீதிகளானது புறக்கணிக் கப்படும் நிலை உருவானது.

தெற்காசிய விவகாரங்களுக் கான அமெரிக்க ராஜாங்கப் பிரதிச் செயலாளர் ரிச்சாட் பௌச்சர் அண் மையில் கொழும்பில் இந்த தீர்வு பற்றி மேலோட்டமாகக் கூறியிருந்தார்.

'தமிழ்ப் புலிகள் பயன்படுத்துகின்ற வழிமுறைகளை நாம் நிராகரித்த போதிலும் தமிழின மக்களால் எழுப்பப்படுக்கின்ற கோரிக்கைகள் நியாயபூர்வமானவை. எவரொருவருக்கும் தங்களது சொந்தப் பிரதேசங்களை ஆளுகின்ற உரிமை, தங்களது தாயகத்தை நிர்வகித்தல் என்பவை நியாயபூர்வமான கோரிக்கையா கும்' என்று தெரிவித்தார்.

தமிழர்கள் தங்களது சொந்தத் தாயகத்தில் தன்னாட்சியுடன் வாழும் உரிமையை ஒப்புக் கொண்டுள்ள மையானது அமெரிக்காவின் கொள் கையில் வரவேற்கத்தக்க ஒரு பரி ணாம வளர்ச்சியாகும் என அவ் ஏட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

# தமிழ் ஊடகங்களை...

செல்ல வேண்டும். உண்மைச் செய்திகளை மக்கள் அறிய வேண்டும். தேசியத் தலைமை என்ன முடிபு தீர்மானம் எடுக்கின்றது என்ற மக்களின் துடிப்புக்கும் ஆவலுக்கும் ஊடகத்தைத்தான் மக்கள் நாடுகின்றார்கள்.மக்களின் ஆவலுக்கேற்ப உண்மையான செய்திகளை எடுத்துச் செல்ல வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகும். தமிழ் ஊடகங்களை எப்போதும் பலவீனப் படுத்த முடியாது. தமிழ் ஊடகங்கள் வளர்ச்சியை நோக்கியே செல்லும்.

கடந்த நான்கரை ஆண்டுகள் போரற்ற, பெரும் நெருக்கடியற்ற காலமாக அமைந்துள்ளது. மீண்டும் ஒரு போர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங் கியுள்ளன.ஒரு பிரகடனப்படுத்தாத போர் ஒன்று எமது தாயகத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.போரை பிரகடனப்படுத்துவது எப்போது என்பது தான் எதிரிகளுக்கு உள்ள பிரச்சினையாக உள் ளது. மக்கள் நாளாந்தம் கொல்லப்படுவதும் பெண்கள், சிறுவர்கள் வேறுபாடுன்றி அழிக்கப்படுவதும் ஆழ ஊடுருவும் தாக்குதல்களை நடத்துவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அதற்கான விளைவுகளையும் எதிரிகள் சந்தித்த வண்ண மே உள்ளனர் என்றார் சு.ப.தமிழ்ச் செல்வன்.

(ச-5)

# பேச்சுக்கான...

தாகவும் பாலித கோகன்ன தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதன்னத் தெரிவித்தார். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.